REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN தினகரன்
2024 பெப்ரவரி 6 செவ்வாய்க்கிழமை
வரு. 92 இல. 32 | Tuesday 06, February, 2024 | 16பக்கங்கள் | 50/-




# புரட்சியின்றி மக்களுக்கு காணி உரிமைப் பத்திரம் வழங்கியமை அரசாங்கத்தின் மகத்தான வெற்றி

## அனைத்து மக்களும் பெருமையுடன் வாழும் நாட்டைக்கட்டியெழுப்ப அர்ப்பணிப்போம் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புரட்சியின்றி மக்களுக்கான காணி உரிமையை உறுதிப் படுத்த முடிந்துள்ளமை அரசாங்கத்திற்கு கிடைத்த மகத் தான வெற்றியென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களும் பெருமையுடன் வாழக்கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற் படுவோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்பட முன்வருமாறு அனைத்து தரப்பினருக்கும் ஜனாதிபதி மீண்டும் அழைப்பு

06



## போக்குவரத்து தொழில்நுட்பங்களை ஒரே தளத்தில் இணைக்கும் கண்காட்சி

### புதிய தயாரிப்புக்களை அமைச்சர் பந்துல பார்வை



இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் பாரத் சர்வதேச மொபிலிட்டி எக்ஸ்போ 2024 (Bharat Mobility Expo 2024) கண்காட்சியில், சிறப்பு விருந்தினராக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்துகொண்டார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை நுகர்வோர் தொடர்புகள் அமைச்சர் பியூஷ்

06

## ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன் சாந்தனை வரவழைக்க நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் அமைச்சரவையில் எடுத்துரைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை, விரைவாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சாந்தனை நாட்டுக்கு திருப்பியழைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில்

06

## 3000 பாடசாலைகளை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கைகள்

### மார்ச்சில் ஆரம்பம், ஆசிரியர்களுக்கும் பயிற்சி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொது தராதர உயர்தரத்துடனான 3000 பாடசாலைகளை எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள், டிஜிட்டல் மயப்படுத்தப்போவதாக கல்வியமைச்சர்

06

### பெரும்போக நெற்செய்கைகள்

## விவசாயிகளின் கணக்குகளில் ரூ. 9.6 பில்லியன் ரூபா வைப்பீடு



பெரும்போக நெற்பயிர் செய்கைக்கான உரக்கொள்வனவு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக விவசாயிகளின் கணக்குகளில் 9.6 பில்லியன் ரூபா வரவு வைக்கப்பட்டுள்ளதாக, விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு ஹெக்டேயருக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக

06

## விலையேற்றத்துக்கேற்ப வருமானமும் அதிகரிக்கும் காலம் விரைவில் வரும்



பொருட்களின் விலையேற்றத்திற்கு ஏற்றவாறு பொதுமக்களின் வருமானம் அதிகரிக்குமென, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் பொறுமையாக இருந்தால் நிம்மதி தரும் மாற்றம் அவர்களுக்கு கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். நாட்டின் தற்போதைய

06

## நிதி மோசடி சம்பவங்கள் 12 நிறுவனங்களில் கணக்காய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக குற்றத்தடுப்பு திணைக்களம் இனங்கண்டுள்ள 12 நிறுவனங்கள் தொடர்பில், கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தேசிய வருமான வரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பாராளுமன்ற நிதி

06

## புற்றுநோயால் பாதிக்கப்படும் குழந்தைகள் தொகை அதிகரிப்பு

**கைத்தொலைபேசி பாவனை, இனிப்பு பண்ட பாவனைகளை குறைக்குமாறு அறிவுரை**

நாட்டில் குழந்தைப் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை 900 ஆக உயர்ந்துள்ளதாக, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, இதற்கு

06

## வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை 18 மாதங்களுக்குள் மேம்படுத்தினோம்

### லிபியாவின் நிலைமைக்கு செல்லாமல் நாட்டை பாதுகாத்த பெருமை எமக்கே உரியது



நாட்டை பொறுப்பேற்கும் சவாலை எவரும் ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்திலேயே, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாங்கள் நாட்டை பொறுப்பேற்றோம். நாட்டை நாங்கள் பொறுப்பேற்றிருக்காமல் விட்டிருந்தால், லிபியா போன்ற நிலைமைக்கு நாடு செல்ல இடமிருந்ததாக, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு

06

## இந்தியாவுக்கான இலங்கை தூதுவருடன் தே.ம.ச தலைவர் அனுர குமார சந்திப்பு



இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில், புதுடில்லியில் உள்ள இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஷேணுகா செனவிரட்னவை சந்தித்து கலந்துரையாடிய போது பிடித்த படம்.

## ஒரே குடும்பத்தினர் பயணித்த ஆட்டோ கோர விபத்து, தாய் பலி



ஹொரணை பாணந்துறை வீதியின் குல்பான பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில், பெண்

06

### கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய மோதல்

## தப்பியோடி கைதாகியோருக்கு பெப்ரவரி 08 வரை விளக்கமறியல்

### பொலனறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பியோடிய 14 கைதிகளை எதிர்வரும் பெப்ரவரி (08) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலனறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட

06

## கட்சியை விமர்சிப்போருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### பீல்ட் மார்ஷலை மறைமுகமாக எச்சரிக்கும் சஜித்



கட்சியையும், தலைமையையும் விமர்சிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசா எச்சரித்துள்ளார். பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை எச்சரிக்கும் வகையிலேயே, சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

06



03

**யுவன் ஷங்கர் ராஜா இலங்கை வருகை**

# நகர்வலம்



# அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வரைக்கும் ஜனாதிபதியின் பயணம் ஓயாது

இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வரையில் ஜனாதிபதி தனது பயணத்தை நிறுத்தமாட்டாரென்பதை, நம்பிக்கையுடன் கூறுவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அனுராதபுர இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சி மாநாட்டிலே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்; அனைவரும் ஒன்றிணைந்து இன்னும் சில காலம் நாட்டின் தலைவராக ஜனாதிபதியை பதவியில் அமர்த்த வேண்டும். திருடர்களை கைது செய்வதற்கு முன்னர், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்து வருகிறார் ஜனாதிபதி. 2018இல், நாடிருந்த நிலையிலிருந்து 2024க்குள் எங்களால் மாற்றத்தை கொண்டு வர முடிந்துள்ளது. 2048 இல் வெற்றி பெற்ற நாடாக மாற்றப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். தொழிலதிபர்கள் ஏதோஒரு வழியில் வியாபா



ரத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். சாதாரண மக்களுக்கும் உழைப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. மின்சாரம், எரிபொருளில்லாத யுகத்துக்கு மீண்டும் செல்ல தயாரில்லை. நாட்டை நேசிக்காதவர்களே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கப் பார்க்கின்றனர். அவரை தோற்கடிப்பது இந்த நாட்டை தோற்கடிப்பதற்கு சமனாகும். ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக நீடித்தால்தான், மக்களைக் காப்பாற்ற முடியும். இலங்கையை வெற்றி பெற செய்வதற்கு இதுவே கடைசி வாய்ப்பென்றும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பிற்கு வருகை தந்துள்ள கொல்லிமலை சித்தர்



சித்தர்கள் ஞானபீடம் அறக்கட்டளை மற்றும் பன்னாட்டு கலாசார சர்வ சமய ஆய்வு மையம் என்ற அமைப்பின் ஸ்தாபருமான வாழும் கொல்லிமலை சித்தர் சுவாமிகள் கொழும்பிற்கு வருகை தந்துள்ளார்.

ஆன்மீகமும் பொதுநலத்தொண்டும் சிரமேற்கொண்டு வாழ்ந்து வரும் சித்தர் தனது சித்தர் பரம்பரையில் 4வது தலைமுறை சித்தராக பிறந்து வாழ்ந்து வருபவர். இவர், சித்தர்கள் ஞான பீடம் அறக்கட்டளை ஊடாக ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகிறார். தனது பன்னாட்டு கலாசார சர்வசமய ஆய்வுமையத்தின் ஊடாக உலகெங்கும் ஆன்மீக சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கோட்பாட்டுக்கமைய தனது ஆன்மீக உபதேசமான 'பிரபஞ்சத்துள் நாம். பிரபஞ்சமே நாம்' என்ற தனது ஆன்மீக கொள்கைளை உணர்த்தும் வகையில் தனது முத்திரையை பதித்து வருகிறார். பல்லாயிரக் கணக்கான சீடர்களை உலகெங்கிலும் உருவாக்கி, மக்களுக்கு ஆன்மீகக் கருத்துக்களை எளிய முறையில் தன் சித்தர் பாரம்பரிய முறைப்படி எடுத்துக் கூறி அனைவரையும் அறவழியிலும் ஆன்மீக நெறியிலும் அழைத்துச் சென்று செல்வ செழிப்புடன் வாழவைப்பவர் இவர். இவரின் நோக்கமே, ஒரே உலகம், ஒரே கடவுள், அனைவரும் ஒருதாய் மக்களாய் வாழவேண்டும் என்பதேயாகும்.

இமயமலை, கொல்லிமலை, அகத்தியர்மலை, சஞ்சீவி மற்றும் இந்தியாவிலிருந்து பல்வேறு மலைகளிலிருந்து காணகிடைக்காத அரிய சஞ்சீவி மூலிகைகளுடன் இலங்கை வந்திருக்கும் சுவாமிகள் இலங்கை மக்கள் சுபீட்சமாக வாழவும், மனஅமைதி, உடல் ஆரோக்கியம் நீண்ட ஆயுள் பெற்று குபேரனாய் வாழவும், ஒவ்வொரு மனிதனின் பிறவி இரகசியத்தை அறிந்து அனைத்து பிரச்சினைகளையும் சஞ்சீவி மூலிகை கொண்டும், யாகத்தின் மூலமும், தீர்வு காண செய்கிறார் வாழும் கொல்லி மலை சித்தர்.

உலக மக்கள் சுபீட்சமாக செல்வ செழிப்புடன் வாழவும், இலங்கையில் ஏற்பட போகும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து இலங்கையும் மக்களும் மீட்சிபெறவும், இலங்கை வாழ் மக்களுக்கு தெய்வ ஆசி வேண்டியும், அரிய பெரிய சஞ்சீவி மூலிகைகளை கொண்டு கொழும்பில் யாகங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு நிரந்தர தீர்வு காணவும் வாழும் கொல்லி மலை சித்தர் சுவாமிகளை சந்தித்து அருளாசி பெற விரும்பும் அடியார்கள் 0701998471 0777318030 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு பிரபஞ்ச ஆச்சாரியார் வாழும் கொல்லிமலை சித்தரின் சீடன் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி வெளிவிவகார அமைச்சின் மத்திய கிழக்கு விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷித ரத்நாயக்கவை வெளிவிவகார அமைச்சில் சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

### சீனன்கோட்டையில்

# 76வது சுதந்திர தின விளையாட்டு நிகழ்வு



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பேருவளை அம்பேப்பிட்டிய "ஸசெக்ஸ்" விளையாட்டு கழகத்தின் 32ஆவது வருட பூர்த்தி விழாவின் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு 11பேர் கொண்ட கிரிக்கட் சுற்றுப்போட்டி சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டு மைதானத்தில் கடந்த சனியன்று ஆரம்பமானது. சுமார் 32 அணிகள் பங்கேற்றுள்ள இப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில் அதிதிகளாக 'ஹொட் பிரட்' உரிமையாளர் துல்பி ஹாஜி மற்றும் மொஹிதீன் ஹாஜி, சமூகசேவையாளர் சர்பான் முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதிப்போட்டிகளின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெற உள்ளது.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜே.வி.பி தலைவர் டில்லியில் சந்திப்பு



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரை புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இச்சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டிருப்பதாவது, எங்கள் இருதரப்பு உறவுகள் குறித்தும் அதனை மேலும் வலுப்படுத்துவதால் உருவாகக்கூடிய பரஸ்பர நன்மைகள் குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

அதேநேரம், இலங்கையின் பொருளாதார சவால்கள், முன்னோக்கிய பாதை குறித்தும் ஜே.வி.பி தலைவருடனான பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டன என்றும் சுட்டிக்காட்டியுள்ளதோடு இந்தியா, 'அயல்நாட்டிற்கு முதலிடம்' என்ற தனது கொள்கை காரணமாக இலங்கையின் நண்பனாகவும் நம்பகத்தன்மை மிக்க சகாவாகவும் விளங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### அதிவேக நெடுஞ்சாலைகளில்

# குறைந்த வேகத்தில் வாகனம் செலுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிவேக நெடுஞ்சாலைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வேகத்தை விட குறைந்த வேகத்தில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அதிவேக நெடுஞ்சாலைகளில் அண்மைக்காலமாக வாகன விபத்துக்கள் அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ள அவர், அவற்றில் பெரும்பாலான வாகன விபத்துக்கள் குறைந்த வேகத்தில் வாகனங்களை செலுத்தியதால் ஏற்பட்டவை என விசாரணைகள் மூலம் தெரிய வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்கவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களை செலுத்துதல் தொடர்பில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜின்னாஹ்வின் நூல் வெளியீட்டு விழா

'ஜின்னாஹ்வின் குறும்பாக்கள் 550', 'விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள்' எனும் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் க. இரகுபரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொட்டராமுல்லப் பிரதேசத்திலும் பல்வேறு சுதந்திர நிகழ்வுகள் இடம்பெற்றன. அவற்றுள் கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலையின் ஏற்பாட்டில் அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திர நிகழ்வில் அஹதிய்யாப் பாடசாலை மாணவர்கள் மரம் நடுகையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம் . கொட்டராமுல்ல பிரதேச அரச உத்தியோகத்தர்கள், பிரதேச உலமாக்கள், அஹதிய்யாப் பாடசாலை மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குறித்த சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வினை கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலையின் தவிசாளர் அல் ஹாஜ் ஏ. டபிள்யூ . எம் . இல்யாஸ் ஏற்பாடு செய்தார்.

(படங்கள் : நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

# 76 வது சுதந்திர தினம்; தேசிய சூரா சபையின் விஷேட நிகழ்வு நாளை

"இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு" எனும் தலைப்பில் தேசிய ஷூரா சபை ஏற்பாடு செய்துள்ள விஷேட நிகழ்வு நாளை 07 ஆம் திகதி மாலை 4 மணி முதல் 6 மணி வரை கொழும்பு 7 இலுள்ள ஜே.ஆர். ஜயவர்தன நிலையத்தில் இடம்பெற உள்ளது. சூரா சபையின் தலைவர் சட்டத்தரணி ரீ.கே. அஸூர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வல்பொல ராகுல நிறுவனத்தின் பணிப்பாளர் கல்கந்தே தம்மானந்த தேரர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈரான் நாட்டுக்கான இலங்கைத் தூதுவருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர், கலாநிதி அஷ்ஷைக் ரவுப் ஸைன் [நளீமி] ஆகியோர் விசேட பேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் அனைத்து இனங்களையும் சேர்ந்த அறிஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தர்காநகரில் மாதர் ஒன்றுகூடல், மலிவு விற்பனை கண்காட்சி



தர்கா நகர் மாதர் ஒன்றியத்தின் உறுப்பினர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும் 'ரமழான் பஜார்' மலிவு விற்பனையும் நேற்று முன்தினம் (03ம் திகதி) தர்கா நகர் சி.எம்.எச். வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாதர் ஒன்றியத் தலைவரும் களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி நூருல் பாக்கியா கரீம் தலைமையில் ஒன்று கூடல் வைபவம் இடம்பெற்றதோடு மலிவு விற்பனை கூடத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார், பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பொறியிலாளர் ஹஷீப் மரிக்கார், மாதர் ஒன்றிய செயலாளர் நஸ்லியா புர்கான் ஆகியோர் இணைந்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். இந்நிகழ்வில் விஷேட அதிதிகள் உட்பட மாதர் ஒன்றிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அதிபராக பதவியேற்பு

*(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

பள்ளிக்குடியிருப்பு அக்/ அஸ்ஸபா கனிஷ்ட வித்தியாலயத்துக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட புதிய அதிபர் அஷ்சேய்க் ஏ.கே.நழிம் நேற்று (05) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். பள்ளிக்குடியிருப்பு அக்கரைப்பற்று அக்/ அஸ்ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எம். லாபீரின் நெறிப்படுத்தலில் பாடசாலை உதவி அதிபர் எம்.ஐ.நஜீம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை அதிபர் ஏ.எச். பௌஸ், எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மஹாகொட ஐ.எல்.எம். சம்ஸுதீன் வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு வருகை தந்த அகில இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் 76 சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டிருந்த பாடசாலையின் அஹதிய்யா மாணவ, மாணவியருடன் எடுத்துக்கொண்ட படம். இந்நிகழ்வில் பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் ரிஸ்வான் ஹாஜியார், மஹாகொட அஹதிய்யா பாடசாலையின் தலைவர் ரியாஸ்தீன் ஹாஜியார், அஹதிய்யா பாடசாலை அதிபர் பி.எஸ்.எம். சியாஸ் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

# சோளப்பயிர்ச்செய்கைக்கான விதை, உர விநியோகங்களில் மோசடிகள்

## பணிப்பாளர் உள்ளிட்ட ஊழியர்கள் உடனடியாக நீக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சிறு அளவிலான விவசாய தொழில் முயற்சி வேலைத்திட்டத்தில், பணிப்பாளர் உள்ளிட்ட அங்கு பணிபுரிந்த சிலர் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில், அவ் வேலைத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு உரிய பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்போகத்தில் சோளம் பயிர்ச்செய்கைக்கான விதை, உரம் மற்றும் அதற்கான நிலங்களைப் பண்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக ஐந்து மாவட்டங்களுக்கு ஒதுக்கியிருந்த நிதியை உரிய காலத்தில் வழங்க இவர்கள் தவறியுள்ளனர். இதற்காக இவர்கள் அத்திட்டத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

சில மாவட்டங்களில் இதுவரையும் விதை மற்றும் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிதியை வழங்காமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதேவேளை சில

பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விதைகள் தரமற்றவை என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை, அம்பாறை மற்றும் பதுளை உள்ளிட்ட

மாவட்டங்களுக்கு சோள பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதற்காக அரசாங்கம விவசாயிகளுக்கு 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அவ்வாறு அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள நிதி உரிய காலத்தில் வழங்கப்படாமையால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

அந்த விவசாயிகள் தம்மிடமுள்ள தங்க நகைகளை அடகு வைத்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியநிலைஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நிறுத்துவதற்கு தகைமையுள்ளவர் ஜனாதிபதியே

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தற்போதைய நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட தகைமையானவர் உள்ளனரா? அவ்வாறிருந்தால் பொதுஜன பெரமுனவில் அவருக்கு சந்தர்ப்பம் வழங்குவது சிறந்ததென ஆளும் கட்சியின் பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். தகைமையானவர் அந்தக்கட்சியில் இல்லையென்றால் கண்டிப்பாக அச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவது அவசியமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலையில் கட்சியை விட நாட்டைப் பற்றி சிந்தித்து சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய தூர நோக்குள்ள தலைவர் ஒருவரே நியமிக்கப்படவேண்டும். அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி அதற்கு சிறந்த தகைமை உள்ளவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன கட்சியின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போது அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

# இந்திய உயர்ஸ்தானிகருடன் செந்தில் தொண்டமான் பேச்சு



கிழக்கு மற்றும் மலையகத்தின் அபிவிருத்தி குறித்து இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருடன் கிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு, இந்திய தூதரகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்கு தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் அபிவிருத்திக்கு முழுமையான உதவிகளை வழங்குவதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இதன்போது உறுதியளித்தார்.

# மொனராகலை புதுருவகல பாடசாலை மாணவர்களுக்கு இசைக்கருவிகள்

## ஜனாதிபதியின் வாக்குறுதி நிறைவேறுகிறது

மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய வாக்குறுதியை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றும் வகையில், பெறுமதிவாய்ந்த இசைக்கருவிகள் பாடசாலைக்கு வழங்கப்படவு ள்ளது. இம்மாதம் 09 இல், இவை வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பயணித்த உலங்குவானூர்தி கடந்த நவம்பர் 03 இல், மோசமான காலநிலை காரணமாக மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய மைதானத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இதன்போது தங்களது பாடசாலைக்கு இசைக் கருவிகள் வேண்டுமென, மாணவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

தங்கள் பாடசாலைக்கு திடீரென வருகை தந்தவர் ஜனாதிபதி என்பதை அறிந்து கொண்ட மாணவர்களும், ஆசிரியர்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். இச்சமயத்தில் உலங்குவானூர்திக்கு அருகில் வந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சிநேகபூர்வ உரையாடலில் மாணவர்கள் ஈடுபட்டனர். பாடசாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குறைபாடுகள் குறித்தும் ஜனாதிபதி மாணவர்களிடம் கேட்டறிந்தார்.

பாடசாலையில் இசைக்கருவிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதன்படி, மிகக் குறுகிய காலத்தில், அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, டிரம்பெட், டிராம்போன், சாக்ஸபோன், கிளாரினெட், மவுண்டபிள் டெம்பரின் உள்ளிட்ட இசைக்கருவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சமூக அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஞ்ஜித் கீர்த்தி தென்னகோன், வலயக் கல்விப் பணிப்பாளர் கே. ஜே. சுசில் விஜேதிலக, வலயக் கல்விப் பணிப்பாளர் எச். டி.தர்மசிறி, மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய அதிபர் எச். எம். யு. திரு.பி.ஹேரத், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

# கற்பிட்டியில் முச்சக்கரவண்டி விபத்து; ஒருவர் பலி 7 பேர் காயம்




புத்தளம் கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட் டிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் ஏழு பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ் விபத்து நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்றது. புத்தளத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வை பார்வையிட்டு, முச்சக்கர வண்டியில் திரும்பிச் செல்கையில், கற்பிட்டி பகுதியிலிருந்து வந்த முச்சக்கர வண்டியுடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், கற்பிட்டியிலிருந்து முச்சக்கர வண்டியின் பின்புறத்தில் அமர்ந்திருந்த ஐந்து பேரில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

இரண்டு முச்சக்கர வண்டிகளிலும் பயணித்த ஏழு பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி, கற்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆறு பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கற்பிட்டி மண்டலக்குடாப் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய வரே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கையடக்கத் தொலைப்பேசியில் பதிவு செய்யப்பட்ட இவ்விபத்தின் காணொளி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுவருகிறது. சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மூடப்பட்ட நிதி நிறுவனத்தின் நட்ட ஈடு வழங்கும் நடவடிக்கை

## இன்று முதல் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மூடப்பட்டுள்ள நிதி நிறுவனமொன்றில் நிதியமைப்பாளர் மற்றும் அந்த வைப்பாளர்களின் உத்தியோகபூர்வ உரிமையுடையவர்களுக்கும் நட்டஈடு வழங்கும் செயற்பாடுகள், இன்று மீள ஆரம்பிக்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவித்தலில், நட்டஈடு வழங்கும் செயற்பாடுகள் இன்று முதல் எதிர்வரும் மே மாதம் வரை நடைமுறைப்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 2023 17ஆம் இலக்க வங்கிகள் விசேட நியதிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்க, இலங்கை வைப்பீட்டுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இந்த நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த வகையில் எதிர்வரும் மே 21ஆம் திகதிவரை இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# நிதி நிறுவனத்தில் 7,090,939 ரூபா திருட்டு: இரு பெண்கள் உட்பட மூவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நிதி நிறுவனமொன்றில் 7,090,939 ரூபா பணத்தை திருடிய சம்பவமொன்றில் தேடப்பட்டு வந்த இரண்டு பெண்கள் உட்பட மூவரை, கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி 31ஆம் திகதி சிலாபம் பகுதியிலுள்ள நிதி நிறுவனமொன்றில் அத்துமீறி பிரவேசித்து, 7,090,939 ரூபாவை திருடியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளனர். இவர் தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து மேற்படி கொள்ளைச் சம்பவத்திற்கு உதவியுள்ள குற்றச்சாட்டில் இரண்டு பெண்களும் மாதிவெல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 33, 46 வயதுடைய பஸ்கொட மற்றும் கடுவெல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யுவன் ஷங்கர் ராஜா இலங்கை வருகை



யுவன் லோங் டிரைவ் (U1 LONG DRIVE) இசைநிகழ்ச்சியை முன்னிட்டு, தென்னிந்திய பாடகரும், இசையமைப்பாளருமான யுவன்சங்கர் ராஜா கொழும்புக்கு வந்தடைந்துள்ளார்.

கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக நேற்று அதிகாலை (05) அவர் நாட்டை வந்தடைந்தார்.

கொழும்பு சிஆர்&எப்சி மைதானத்தில் எதிர்வரும் (24) இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சி தொடர்பான ஊடக சந்திப்பில் கலந்துக்கொள்வதற்காக, யுவன் சங்கர் ராஜா இலங்கை வந்துள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். இந்நிலையில் யுவன் லோங் டிரைவ்வினுடைய முன்னாயத்த கலந்துரையாடல்கள் கொழும்பு தாமரைக்கோபுர அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விசை நிகழ்ச்சியில் தென்னிந்திய பாடகர்களான ஹரிச்சரன், என்ரியா, பிரேம்ஜி, திவாகர், சாம் விஷால், குக்சார், சௌந்தர்யா, கௌதம், எம்.சி.சனா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# விமான நிலையத்தில் கடுமையாகும் கட்டுப்பாடு

நாட்டிற்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் சகல மக்களையும் அடையாளம் காணும் வகையில் எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பாரிய குற்றங்களை செய்துவிட்டு, நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயல்வோரை, இந்த எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பு அடையாளம் காட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நபர்களின் தகவல்கள் இந்த அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனால், விமான நிலையமூடாக நாட்டிற்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ முயல்வோரை, இது அடையாளம்காட்டும் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறான எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், சாகல ரத்நாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடியதாகவும் கூறப்படுகிறது.



மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீளவும் இணைப்பை பெற முடியாதுள்ளவர்களுக்கு மீளவும் இணைப்பை பெற்றுக்கொடுக்கும் நலனுதவித் திட்டத்தை ஹாஸிம் உமர் பவுண்டேசன் ஆரம்பித்துள்ளது. புனித ரமழானையொட்டி ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் முதற்கட்டமாக காத்தான்குடியையும், காத்தான்குடியைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த (வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும்) குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. இந்நலனுதவித் திட்டத்தின் ஆரம்ப வைபவம் ஹாசிம் உமர் பௌண்டேசனின் கொழும்பு தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. ஹாசிம் உமர் பௌண்டேசனின் நிறுவுநர் புரவலர் ஹாசிம் உமர் இத்திட்டத்துக்கான உதவியை ஹாசிம் உமர் பௌண்டேசன் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பொறுப்பாளர் ரீ.எல்.ஜவ்பர்கானிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், கவிஞர் மேமன்கவி, கலைஞர் ராதா மேத்தா, பௌண்டேசனின் ஆலோசகர் .ஏ.எம்.ஜௌபர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

# அமைச்சர் கெஹெலியவுக்கு வீட்டிலிருந்து உணவு பெற அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்க மறியல் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு, சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் வழங்கப்படும் உணவுக்கு பதிலாக வீட்டிலிருந்து உணவை பெற்றுக் கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவருக்குள்ள நோய் காரணமாக மருத்துவர்களின் பரிந்துரைக்கு இணங்க பெற்றுக் கொடுக்கப்படும் உணவு வகை வித்தியாசமாக காணப்படுவதால், வீட்டிலிருந்து அவருக்கு உணவை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி கோரி வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகளிடம் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதற்கிணங்க சிறைச்சாலை மருத்துவர் அந்த அனுமதியை வழங்கியுள்ளார். அதன்படி நேற்று முதல் அமைச்சருக்கு வீட்டிலிருந்து உணவு பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முட்டை ஒன்றின் விலை 58 ரூபாவாக உயர்ந்தது!

முட்டை ஒன்றின் விலை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 40 ரூபாவாக குறைக்கப்பட்ட போதிலும் மீண்டும் ஒரு முட்டையின் விலை 58 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

தாம், ஒரு முட்டையை மொத்த விலையில் 60 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாக பேக்கரி உரிமையாளர்கள் கூறுகின்றனர். கோழிப் பண்ணை உரிமையாளர்களே இவ்வாறு முட்டை விலையை உயர்த்தியதாகவும் முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இடைத்தரகர்கள் குழுவொன்றே முட்டையின் விலையை அதிகரித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். வேகமாக அதிகரித்து வரும் முட்டை விலையைக் கட்டுப்படுத்த, எதிர்காலத்தில் சில நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

*உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.*

# போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்!

புதிய ஆண்டின் முதலாம் தவணைக்காக பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு நேற்று வருகை தந்ததைப் பரவலாக அவதானிக்க முடிந்தது.

இந்நாட்டு மாணவர்கள் வெவ்வேறு விதமான சவால்களுக்கு மத்தியில் இன்றைய காலகட்டத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

அந்தச் சவால்களில் போதைப்பொருள் துஷ்பிரயோகம் பிரதான இடத்தைப் பிடித்ததாக விளங்குகின்றது. அதன் காரணத்தினால் அந்த சவாலில் இருந்து மாணவ சமூகத்தினர் உள்ளிட்ட முழு இளம் பராயத்தினரையும் பாதுகாக்கும் வகையில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்றாலும் அந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும்.

அதன் ஊடாக போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாவதில் இருந்தும் போதைப்பொருள் குற்றங்களில் இருந்தும் இந்நாட்டு மாணவர்கள் உள்ளிட்ட இளம் பராயத்தினரைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இன்று நாட்டில் ஐஸ், பன்பரக், போதை மாத்திரைகள், கஞ்சா, ஹெரொய்ன் உள்ளிட்ட பலவித போதைப்பொருட்கள் காணப்படுகின்றன. அவை நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெரும் தலையிடியாக விளங்குகின்றன. ஆனால் இவ்வாறான ஒரு நிலை இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நாட்டில் காணப்படவில்லை. அக்காலப் பகுதியில் தலைநகரிலும் அதனைச் சூழவுள்ள நகரங்களிலும் மாத்திரம் தான் போதைப்பொருள் குற்றங்கள் காணப்பட்டன. ஆனால் இன்று நகரம், கிராமம் என்ற வேறுபாடு இன்றி நாட்டின் எல்லா இடங்களுக்கும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் வியாபித்துள்ளன.

மாணவர்கள் உள்ளிட்ட இளம் பராயத்தினரை இலக்கு வைத்து ஐஸ், பன்பராக், போதை மாத்திரைகள் போன்ற போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படக் கூடியளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது. இது தொடர்பில் அவ்வப்போது புகார்களும் தெரிவிக்கப்படுகின்றன. அதேநேரம் சில பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் இருக்கும் சிற்றுண்டிச்சாலைகளில் போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளது. அச்செயலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட ரீதியிலான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் போதைப்பொருள் குற்றங்களில் இருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் சட்டங்களும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடந்த டிசம்பர் மாதத்தின் பிற்பகுதி முதல் 'யுக்திய' என்ற பெயரில் போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விஷேட வேலைத்திட்டமொன்றை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் மற்றும் விஷேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள சிற்றுண்ணடிச்சாலைகளில் திடீர் தேடுதல்களை நடாத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ள தற்போதைய சூழலில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகளில் திடீர் தேடுதல்கள் நடாத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் ஊடாக மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருட்கள் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு இந்நடவடிக்கையின் மூலம் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களில் இருந்து மாணவர்கள் உள்ளிட்ட இளம் பராயத்தினரைப் பாதுகாக்கும் நோக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு பெற்றோரும் பொது மக்களும் சமூக நலன் விரும்பிகளும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதன் ஊடாக சமூக, கலாசார சீரழிவுகளில் இருந்தும் நாட்டையும் மக்களையும் விடுவிக்கக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒரு இலட்சம் மூலிகை மரக்கன்றுகள் நடுகை

## சுவதரணி ஓளட வாரம் திட்டம் கல்முனை பிரதேசத்தில் ஆரம்பம்

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒரு இலட்சம் ஔடத மரங்களை (மூலிகை மரங்கள்) பயிரிடுதல் திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் டொக்டர் எம்.ஏ.நபீல் தலைமையில் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி மரக்கன்றுகளை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு சில தினங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.அதாஉல்லாவிடம் இம்மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாநகர ஆணையாளர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

அந்த வகையில் பொத்துவில், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், அக்கரைப்பற்று, ஆலங்குளம் ஆயுர்வேத மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கான மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல். அப்துல் ஹை குறித்த மரக்கன்றுகளை நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் துறையின் ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஜெ.பாஸ்கரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஷகீலா இஸ்ஸடீன் ஆகியோரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக மாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் ஔடத மரக்கன்றுகள் பயிரிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







றிசாத் ஏ காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர் )

# கனடா சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, வியாபார முதலீட்டாளர்கள் மாநாடு

## கொழும்பில் ஆரம்ப நிகழ்வும் கலந்துரையாடலும்

இலங்கையில் உள்ள கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனம் மற்றும் சர்வதேச வர்த்தக இணைப்பாளர் கூட்டிணைப்பு ஆகியன ஒன்றிணைந்து மேற்படி நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன. கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி அம்ரி நிசாம் மற்றும் வணிக உலக சர்வதேச அமைப்பின் இயக்குனர் ரகு இந்திர குமார், சர்வதேச வர்த்த இணைப்பாளர் கூட்டிணைப்பின் பணிப்பாளர் தன்வீர் ஆர். எம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிங்கப்பூர் வர்த்தக போரத்தின் ஆளுநர் கலாநிதி சிந்தியா சாங் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு கருத்துத் தெரிவித்த சர்வதேச வர்த்தக இணைப்பாளர் கூட்டிணைப்பின் பணிப்பாளர் தன்வீர் ஆர். எம், "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் எமது அமைப்பு பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. குறிப்பாக பாரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழிலாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்த சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளோம்.

இதனூடாக இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தவும் முடியும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஊடாகவே நாட்டின் பொருளாதார துரிதம் வளர்ச்சியடையும் என்பதுடன் இலங்கையிலுள்ள முன்னணி வர்த்தகர்கள் போட்டி கொடுக்க சந்தைக்கு முகம்கூடியதாகவும் இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுக்கு இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் பிரமுகர்கள் வருகை தந்திருந்ததுடன், சிறுமுயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி மற்றும் சேவைகளை அறிமுகம் செய்தமை விசேட அம்சமாகும்.









# செங்கடல் தாக்குதலும் அமெரிக்க நலன்களும்!



சர்வதேச அரசியல் முறைமை கடல்களை மையப்படுத்தியே ஆதிக்கம் பெறுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கில சாகசக்காரர் சர் வால்டர் ராலே, "கடலுக்குக் கட்டளையிடுகிறவன் வணிகத்தைக் கட்டளையிடுகிறான்; உலகத்தின் வர்த்தகத்தை யார் கட்டளையிடுகிறாரோ அவர் உலகின் செல்வங்களையும், அதன் விளைவாக உலகத்தையும் கட்டளையிடுகிறார்" எனத் தெரிவித்துள்ளார். இந்த இலக்கினை மையப்படுத்தியே இன்று கடலை மையப்படுத்திய அரசியல் கட்டமைக்கப்படுகின்றது.

குறிப்பாக வணிகப்போக்குவரத்தை மையப்படுத்திய வழித்தடங்களை கொண்ட கடல் ஆதிக்கம் முதன்மை பெறுகின்றது. செங்கடல் மீதான சர்வதேச பிராந்திய சக்திகளின் கவனமும் கடல் வணிக வழித்தடங்களை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. மூன்று சமீபத்திய நிகழ்வுகள் செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் உலகளாவிய மூலோபாய கவனத்தைக் கொண்டு வந்துள்ளன.

முதலாவதாக, டிசம்பரில் இருந்து, ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இப்பகுதி வழியாக செல்லும் உலகளாவிய கப்பல் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்துகின்றது. இரண்டாவதாக, ஹவுதி அச்சுறுத்தலுக்கு விடையிறுக்கும் வகையில், அமெரிக்கா Operation Prosperity Guardian தொடங்கியது. இறுதியாக, எத்தியோப்பியா சோமாலிலாந்தின் சுயஆளும் பிரதேசத்துடன் அங்கீகாரத்திற்கு ஈடாக கடல் அணுகலுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா ஆகியவை உலகளாவிய புவிசார் அரசியலுக்கு முக்கியமானவை. ஏனெனில் அவை மத்திய தரைக் கடலை இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கின்றன. 1869இல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இந்த நீர்நிலைகளின் மூலோபாய முக்கியத்துவத்தை அதிகரிப்பதில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. சூயஸ் கால்வாயின் திறப்பு தூரத்தை கிட்டத்தட்ட 40 வீதம் குறைத்தது மற்றும் வர்த்தகம் மற்றும் மக்களின் அதிக இயக்கத்தை எளிதாக்கியது.

மேற்கு ஆசியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டவுடன், செங்கடல் பாதையின் மூலோபாய முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. ஒவ்வொரு ஆண்டும், 17,000 கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாகச் செல்கின்றன. அதாவது, உலக வர்த்தகத்தில் 10வீதம் கால்வாய் வழியாக செல்கிறது. கப்பல் நிறுவனங்கள் இந்தப் பாதையைத் தவிர்த்தால், போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கும். உலகளாவிய கப்பல் போக்குவரத்து மீதான ஹவுதி தாக்குதல்களையும் செங்கடல் பாதை வழியாக செல்லும் கப்பல்களுக்கு அமெரிக்காவின் பாதுகாப்பை வழங்கும் செயற்பாடுகளையும் இந்தப் பின்னணியிலேயே பார்க்க வேண்டும்.

கடந்த டிசம்பரில், ஹவுதி தாக்குதல்களில் இருந்து செங்கடலைப் பாதுகாக்கும் நோக்கில் ஒரு சர்வதேச இராணுவக் கூட்டணியான Operation Prosperity Guardian அமைப்பதை அமெரிக்கா அறிவித்தது. ஜனவரி 12 முதல், அமெரிக்காவும் பிரிட்டனும் யேமனில் உள்ள ஹவுதி இலக்குகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வருகின்றன. குறிப்பாக, அமெரிக்காவும் பிரிட்டனும் யேமன் இராணுவ நிலைகளை இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை ஆரம்பித்தன. பதிலடியாக, ஹவுதிகள் அனைத்து அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் நலன்களையும் முறையான இலக்குகளாக அறிவித்தனர். இந்த அறிவிப்பு இவ்நலன்களின் சாத்தியமான இலக்கு செங்கடல் பகுதியில் மட்டும் இல்லாமல் வளைகுடா அரபு நாடுகளுக்கும் நீட்டிக்கப்படலாம் என்ற ஊகங்களை அதிகரித்தது.

ஹவுதிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர். கப்பல்களை குறிவைப்பது யேமன் மக்கள் மீதான அவர்களின் பொறுப்புகளில் இருந்து கவனத்தை திசை திருப்பும் ஒரு வழியாகும்.

போராட்டக்குழுவான ஹவுதிகளின் எதிர்பார்ப்பை விட, வல்லாதிக்க அரசாகிய அமெரிக்காவின் ஈடுபாட்டின் நலன் பலமானது. மேற்காசியாவில் அதிகரிக்கும் ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கத்திற்கு பதிலீடு கொடுக்க வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு காணப்பட்டது. அதற்கான வாய்ப்பினை ஹவுதிகளின் செங்கடல் தாக்குதலூடாக அமெரிக்கா பயன்படுத்திக் கொள்கின்றதா என்பதுவே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தாக அமைகிறது. டிசம்பரில், அமெரிக்கா செங்கடல் பிராந்தியத்தில் ஹவுதி தாக்குதல்களை எதிர்கொள்வதன் மூலம் செங்கடலின் பாதுகாப்பைப் பாதுகாக்க ஒரு சர்வதேச கூட்டணியை அமைப்பதாக அறிவித்தது. இந்த வெளிப்படையான குறிக்கோளுக்கு மறைகரமாக வெளிப்படுத்தப்படாத குறிக்கோள்கள் இருப்பதாக சில நிபுணர்கள் நம்புகின்றனர்.

முதலாவது, செங்கடலில் ஹவுதி தாக்குதல்களுக்கு அதன் பதிலளிப்பதன் மூலம், உலகின் மிக முக்கியமான நீர்வழிகளில் ஒன்றைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா அப்பகுதியை இராணுவமயமாக்கியுள்ளது. 1973 ஒக்டோபர் போருக்குப் பிறகு செங்கடலின் மூலோபாய முக்கியத்துவத்தை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. இதன் விளைவாக, சமீபத்திய ஹவுதி தாக்குதல்கள், செங்கடலை இராணுவமயமாக்குவதற்கும், பாப் அல் மண்டப் நீரிணையின் மீதான கட்டுப்பாட்டைப் பாதுகாப்பதற்கும், மேலும் கணிசமான எண்ணிக்கையிலான அமெரிக்கப் படைகளை அப்பகுதியில் நிலைநிறுத்துவதற்கும் அமெரிக்காவிற்கு ஒரு சாக்குப் போக்காக இருக்கலாம்.

இந்த மூலோபாய நடவடிக்கையானது, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் செய்தது போல், இஸ்ரேலின் பாதுகாப்பு நலன்களைப் பாதுகாக்கும் அதே வேளையில், அமெரிக்க செல்வாக்கு மண்டலத்தை விரிவுபடுத்தலாம். இந்த சூழலில், செங்கடல் விரைவில் சர்வதேச போட்டிக்கான மையப் புள்ளியாக மாறும். குறிப்பாக ஆபிரிக்காவின் முனையில் பல போட்டி நாடுகளுக்கு சொந்தமான பதினொரு இராணுவ தளங்கள் காணப்படுகின்றன. பகைமைகள் விரைவில் ஒரு சர்வதேச போராக விரிவடைந்து, செங்கடல் பிராந்தியத்தில் சர்வதேச வழிசெலுத்தலில் புதிய நிபந்தனைகளை விதிக்க வழி வகுக்கும்.

இரண்டாவது, இராணுவ மூலோபாய வல்லுனர்களின் கூற்றுப்படி, அமெரிக்கா வேண்டுமென்றே செங்கடலில் ஹவுதி தாக்குதல்களின் தாக்கத்தை பெரிதாக்க முயன்றது மற்றும் பாதுகாப்பு சபையின் 2722 தீர்மானத்தை ஏற்கத் தூண்டியது. இந்தத் தீர்மானம் ஜனவரி 9ஆம் திகதி ஹவுதி கட்டுப்பாட்டில் இருந்து செங்கடலில் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை சரமாரியாக ஏவப்பட்ட அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கடற்படை இடைமறித்ததைத் தொடர்ந்து, ஹவுதிகள் வணிகர் மற்றும் வணிகத்தின் மீதான அனைத்து தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றது. இந்த தீர்மானத்தை பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டுள்ளது. காசா மோதலுடன் தாக்குதல்களை இணைக்கும் திருத்தம் உட்பட ரஷ்ய கூட்டமைப்பின் மூன்று திருத்தங்களை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நிராகரித்தன. தொடர்ந்து வாக்கெடுப்பினை நிரந்தர உறுப்புரிமை நாடுகளான சீன மற்றும் ரஷ்சியா புறக்கணித்திருந்தன. அமெரிக்க ஹவுதி தாக்குதலை பெரிதாக்குவதனூடாக, பாப் அல் மண்டப் பகுதி அமைப்பில் இருப்பதை நிறுவுவதில் அமெரிக்காவின் நலன் பிரதிபலிப்படுக்கப்படுகின்றது. குறிப்பாக பாப் அல் மண்டப் பகுதியில் உள்ள ஜிபூட்டியில் ஏற்கனவே சீனாவின் முதலாவது வெளியக இராணுவத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பின்னணியில் சீனாவின் செல்வாக்கு அப்பகுதியில் உயர்வாக காணப்படுகின்றது. இப்பின்னணியிலேயே சீனாவின் செல்வாக்கைக் குறைக்கவும், இந்த மூலோபாய நீரிணையில் மூலமான சீனாவின் வர்த்தகத்தை மட்டுப்படுத்தவும், அதே நேரத்தில் ரஷ்யாவின் பிராந்திய திறன்களைக் கட்டுப்படுத்தவும் அமெரிக்க பாப் அல் மண்டப் பகுதியில் தனது கவனத்தை குவித்துள்ளது.

எனவே, ஈரான் ஆதரவு போராட்டக்குழுவான ஹவுதி ஏற்படுத்தியுள்ள செங்கடல் மையப்படுத்திய அரசியலை அமெரிக்கா தனது அரசியல் அதிகார நலனுக்கு சாதகமான களமாக மாற்றி வருகின்றது. அதேவேளை செங்கடலை மையப்படுத்திய அமெரிக்காவின் இராணுவ குவிப்பு செங்கடலை கொதிநிலைக்கு நகர்த்தக்கூடிய அபாயமே நிறைந்து உள்ளது. ஏற்கனவே அப்பிராந்தியத்தில் சீனா மற்றும் ரஷ்யா தமது நலன்களை ஈடேற்றிக்கொண்டிருக்கையில், அதனை மட்டுப்படுத்தும் நோக்கிலான அமெரிக்காவின் வருகை வல்லாதிக்க போட்டி நெருக்கடியை உருவாக்குகிறது.

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

# தினகரனில் பிரசுரமான கட்டுரை பற்றிய விளக்கம்

கடந்த 31.01.2024 தினகரன் பத்திரிகையின் 4ஆம் பக்கத்தில் 'மாணவர்களின் வாழ்வில் முக்கியத்துவம் மிகுந்த வழிகாட்டல் ஆலோசனை சேவை' என்ற தலைப்பில் றிப்கா அன்ஸார் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையொன்று பிரசுரமாகியிருந்தது.

இக்கட்டுரையை றிப்கா அன்ஸார் அவர்கள் தினகரனுக்கு அனுப்பிய வேளையில், அவர் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் அக்கட்டுரை அவரால் தினகரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டு சில நாட்களின் பின்னர், அவ்வித்தியாலயத்திற்கு புதிய அதிபரொருவர் நியமிக்கப்பட்டார்.

றிப்கா அன்ஸார்(அதிபர் சேவை) தற்பொழுது மழ்ஹருஸ்ஷம்ஸ் மகாவித்தியாலயத்திலேயே கடமையாற்றுகின்றார். அப்பாடசாலைக்கு தற்போது புதிய அதிபர் ஒருவர் கடமையில் உள்ளார். றிப்கா அன்ஸார் அப்பாடசாலையில் முன்னர் அதிபர் பதவியில் இருந்த வேளையிலேயே அக்கட்டுரையை தினகரனுக்கு அனுப்பி வைத்தாரென்பதையும், அதன் காரணமாகவே அக்கட்டுரையில் அவரது பெயருக்குக் கீழுள்ள அடிக்குறிப்பில் '(அதிபர்) மழ்ஹருஸ் ஷம்ஸ் மகாவித்தியாலயம், சாய்ந்தமருது' எனக் குறிப்பிடப்பட்டது என்பதையும் அறியத் தருகின்றோம்.

# விழுமியங்களை உள்ளடக்கிய நற்செய்தியை பறைசாற்றுவோம்



தவக்காலத்தை ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் நாம் வாழும் தற்போதைய உலகின் நற்செய்தி அறிவிப்புப் பணி எவ்வாறு இருக்கின்றது என்பதைக் குறித்துச் சிந்திக்க இந்த பொதுக் காலத்தின் ஐந்தாம் வாரத்தில் நாம் அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் நற்செய்திக்கு சான்று பகர்பவர்கள் உலகெங்கினும் கொல்லப்பட்டும் வதைக்கப்பட்டும் வருகின்றனர். ஆனாலும் அவற்றின் மத்தியிலும் இறையாட்சிக்கான நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது நிறுத்தப்படாமல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. காரணம், இது இயேசுவுக்கான ஓர் தொடர் ஓட்டம்.

"இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே, பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப்போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில், மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச்செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள்" என்றும், "ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்" (மத் 10:1618, 28) என்றும் குறிப்பிட்டுள்ளார் இயேசு.

**இன்றைய நமது நற்செய்தி அறிவிப்பு**

தற்போதைய நமது நற்செய்தி அறிவிப்புப் பணி எப்படி இருக்கின்றது என்பதைக் குறித்துச் சிந்திக்கவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

நாம் வாழும் இன்றைய உலகில் நல்ல செய்தியை காட்டிலும் கெட்ட செய்தியே அதிகம் அறிவிக்கப்படுகிறது. மற்றவர்களின் வாழ்வில் காணப்படும் நற்செயல்களை அறிவிப்பதை விட்டுவிட்டு அவர்களிடம் விளங்கும் ஒரு சில வேண்டத்தகாத குணங்கள் வேண்டுமென்றே பெரிதுபடுத்தப்படுகின்றன.

எந்த அளவுக்கு ஒருவரின் பெயரைக் கெடுக்க முடியுமோ அல்லது அவரது நற்பெயருக்கு களங்கம்

**அருட்பணி செல்வராஜ் சூசைமாணிக்கம்**

விளைவிக்க முடியுமோ அந்தளவுக்கு அத்தகைய செயல்கள் அன்றாடம் அரங்கேறி வருகின்றன.

இது சாதி, மதம், மொழி மற்றும் இனத்தின் பெயரால் நிகழ்ந்து வருகின்றது. குறிப்பாக, துறவற வாழ்விலும் இது அதிகம் காணப்படுவது தான் மிகுந்த வேதனை தருகின்றது. அதற்கு முக்கியமானதொரு எடுத்துக்காட்டு 'மொட்டைக்கடுதாசி' கலாச்சாரம்.

இப்போது இது அடுத்தக்கட்டத்திற்கு நகர்ந்து விட்டது. திருஅவையில் முக்கியமான பொறுப்பிற்கு ஒருவர் வந்துவிடப்போகிறார் என்பதை அறிந்து அவருடைய பெயருக்கு முன்கூட்டிய பங்கம் விளைவிப்பது கூட புது வழியாகிவிட்டது. நமதாண்டவர் இயேசுவும் கூட பரிசேயர், சதுசேயர், திருச்சட்ட அறிஞர்கள், தலைமைக்குருக்கள், மூப்பர்கள் ஆகியோரிடம் காணப்பட்ட தவறுகளை நேரிடையாகக் கண்டித்தாரே தவிர அவர்களுடைய பெயரைப் பங்கப்படுத்த அவர் ஒருபோதும் விரும்பியதே இல்லை .

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் எம்மாதிரியான நற்செய்தியை அறிவிக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். நாம் படைக்கப்பட்டதன் நோக்கமே, கடவுளை அறிந்து அன்புசெய்து அவர் பணியாற்றவே என்பதை உணர்ந்து இயேசு வெளிப்படுத்திய விழுமியங்களை உள்ளடக்கிய நற்செய்தியை நாள்தோறும் அறிவிப்போம். அதற்குச் சான்று பகர்வோம். இவ்வருளுக்காக இறைவனிடம் மன்றாடுவோம்.




# உடப்பு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய திருவிழா









வரலாற்று சிறப்பு மிக்க புத்தளம் உடப்பு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி பங்குத்தந்தை ஜோஸப் ஜீஸஸ் தலைமையில் இடம்பெற்றது. அருட்தந்தை அமல் ராஜ் உட்பட அருட் சகோதரிகளும் கலந்துகொண்டதுடன் புனித சவேரியார் திருச்சுரூப பவனி ஆலய வெளிவீதியில் கடற்கரை வழியாக வலம் வந்து ஆலயத்தை வந்தடைந்தது. திருவிழா நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# பழிவாங்கும் மனநிலை

## திருமுழுக்கு யோவானின் கொடுமையான மரணம்

மனிதர் மத்தியில் பழிவாங்கும் எண்ணம் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்துள்ளது. பழைய ஏற்பாட்டு காலத்தில் அவ்வாறான பெருமளவு சம்பவங்களை குறிப்பிட முடியும்.



அந்த வகையில் ஸ்நாபக அருளப்பர் என அழைக்கப்படும் யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை மாற்கு நற்செய்தி நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றது.

கடந்த வாரம் நற்செய்தி வாசகமாக தரப்பட்டுள்ள அந்த சம்பவத்தை மனிதரின் மனநிலைய பரிசோதிப்பதற்காக நாம் எடுத்துக் கொள்ளலாம். அது இந்தளவு கொடுமையானதா என்பதைக் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது.

இனி மாற்கு நற்செய்தியின் அந்தப் பகுதியை பார்ப்போம்.

"இயேசுவின் பெயர் எங்கும் பரவியது. ஏரோது அரசனும் அவரைப் பற்றிக் கேள்வியுற்றான். சிலர், "இறந்த திருமுழுக்கு யோவான் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார்; இதனால் தான் இந்த வல்ல செயல்கள் இவரால் ஆற்றப்படுகின்றன" என்றனர்.

வேறு சிலர், "இவர் எலியா" என்றனர். மற்றும் சிலர், "ஏனைய இறைவாக்கினரைப்போல் இவரும் ஓர் இறைவாக்கினரே" என்றனர்.

இதைக் கேட்ட ஏரோது, "இவர் யோவானே. அவர் தலையை நான் வெட்டச் செய்தேன். ஆனால், அவர் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார்" என்று கூறினான்.

இதே ஏரோது, தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான்; அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான்.

ஏனெனில், யோவான் ஏரோதிடம், "உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல" எனச் சொல்லிவந்தார். அப்போது ஏரோதியா அவர் மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலை செய்ய விரும்பினாள்; ஆனால், அவளால் இயலவில்லை.

ஏனெனில், யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக் கேட்டு மிகக் குழப்பமுற்ற போதிலும், அவருக்கு மனமுவந்து செவி சாய்த்தான்.

ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும், ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான்.



அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்" என்றான்.

"நீ என்னிடம் எது கேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்" என்றும் ஆணையிட்டுக் கூறினான்.

அவள் வெளியே சென்று, "நான் என்ன கேட்கலாம்?" என்று தன்தாயை வினவினாள். அவள், "திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்" என்றாள்.

உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும்" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும், விருந்தினர்முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை.

உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி,

அதை ஒரு தட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள்.

இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள்."

இந்த சம்பவம் போன்ற செயற்பாடுகள் உலகம் வளர்ச்சியடைந்த இந்தளவு நாகரீக காலத்திலும் இடம்பெறுகின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. பழிவாங்கும் எண்ணங்கள் மனித மனங்களிலிருந்து இல்லாதொழிய நாம் இறைவனை பிரார்த்திப்போம்.

**எல். செல்வா**

# "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்"

## பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்



ஒன்றிணைந்து மகிழ்வுடன் கற்கும்போது வளர்ச்சியடைகின்றோம் முதிர்ச்சியடைகின்றோம். நண்பர்கள், ஆசிரியர்கள், கல்வி கற்க உதவுபவர்கள் என அனைவரோடும் நல்ல உரையாடலை நாம் ஏற்படுத்துகின்றோம் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். அறியாமை பயத்தை வளர்க்கின்றது, பயம் சகிப்புத்தன்மையின்மையை வளர்க்கின்றது என்றும், எப்போதும் புதியவற்றைக் கற்றுக்கொள்ளவும் சிறந்ததை வழங்க அனுமதிக்கவும் உதவுகின்ற அறிவு, பிறருடனான உரையாடலில் நம்மை வளர்க்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

பெப்ரவரி 3 சனிக்கிழமை வத்திக்கான் புனித ஆறாம் பவுல் அரங்கத்தில் இத்தாலியின் வரேசே பகுதி பாடசாலை பொறுப்பாளர்கள், மாணவர்கள் ஆசிரியர்கள் என 3000 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ், மகிழ்ச்சியுடன் ஒன்றிணைந்து கற்றல் என்பது முதிர்ச்சியடைதலையும் வளர்ச்சியடைதலையும் வெளிப்படுத்துகின்றது என்றார்.

உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்று நமக்குக் கற்பித்த இயேசு, உண்மையின் வழியில் ஒன்றிணைந்து நடக்க நம்மை அழைக்கின்றார் என்றும், ஒன்றிணைந்து மகிழ்வுடன் கற்கும்போது வளர்ச்சியடைகின்றோம் முதிர்ச்சியடைகின்றோம். நண்பர்கள், ஆசிரியர்கள், கல்வி கற்க உதவுபவர்கள் என அனைவரோடும் நல்ல உரையாடலை நாம் ஏற்படுத்துகின்றோம் என்றும் தெரிவித்தார் திருத்தந்தை.

புதிய விடயங்களுக்கு திறந்த மனதுடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், முக்கியமற்றவைகளான சமூகவலைதளங்களில் பெறும் விருப்பம், (like, comment, followers) செய்தி, பின்தொடர்பவர்கள் போன்றவற்றின் கருத்துக்களால் தாக்கப்படாமல், கவனமாக இருக்கவேண்டும் என்றும் இல்லையென்றால் இவற்றால் நமது சுதந்திரம் பறிக்கப்படும் என்றும் எடுத்துரைத்தார்.

அதேவேளையில் அவசியமில்லாதவைகள், வேறுபட்ட கருத்துகள், சிந்தனை முறைகள் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளவும், மாற்றிக்கொள்ளவும் பயப்பட வேண்டாம் என்ற திருத்தந்தை , எப்போதும் கேட்கவும் விவாதிக்கவும் கூடிய வகையில் உண்மையை நேசிக்கக் கூடியவர்களாக இருப்பது சிறந்தது என்றும் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

**மெரினா ராஜ்**



தெஹிவளை "அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா" அரபுக் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதாந்தம் நடாத்தப்பட்டு வரும் புனித "கஸீதத்துல் புர்தா" மஜ்லிஸின் இவ்வருடத்துக்கான ஆரம்ப மஜ்லிஸ், வழமைபோல் கல்லூரியின் மஜ்லிஸ் மண்டபத்தில் (27) சனிக்கிழமை மாலை மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து நடைபெற்றது.சங்கையான இப்புனித மஜ்லிஸ் நிகழ்வில், பிரபல தொழில் அதிபர்களான அஸ்ஸெய்யித் ஹனீப் மௌலானா, ராயிஸ் மீரா ஹாஜியார் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், உஸ்தாது மார்கள், மாணவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், தங்கள் வாப்பாவின் முரீதீன்கள் முஹிப்பீன்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மரம் விழுந்து மாணவன் பலி

கம்பளையில் உள்ள சர்வதேச தனியார் பாடசாலை ஒன்றின் வளாகத்தில் மரம் வீழ்ந்ததில் ஐந்து வயது மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் கம்பளை, இல்லவத்துர பகுதியைச் சேர்ந்த மொஹமட் அஸ்வி என்ற மாணவன் உயிரிழந்துள்ளதாக பொலிசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்களும் சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இன்றைய பலன்கள்

(06.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய நேரிடலாம்.

**ரிஷபம் :**
பகை பாராட்டிய ஊழியர்கள் இனிமேல் நட்புடன் பழகுவர். சொந்த தொழில் செய்பவர்கள் தொழிலில் நல்ல அனுபவம் உள்ள உதவியாளர்களை பணியில் அமர்த்திக் கொள்ள திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலைப்பளுவினால் தொல்லை பட நேரலாம்.அவசியமான பணி ஒன்றை அவசரமாக செய்து கொடுக்கும் நிர்பந்தம் ஏற்படலாம்.

**கடகம்:**
சொந்தத் தொழிலில் முக்கிய பணியை நிறைவேற்ற அலைச்சலை சந்திப்பீர்கள். கூட்டுத் தொழிலில் போட்டிகளும் வியாபாரத்தில் தொய்வு ஏற்படக்கூடும் .

**சிம்மம்:**
சொந்தத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையால் வேலைப்பளு அதிகரிக்கும் ஓய்வின்றி உழைக்க வேண்டிய கவலையை கூடுதல் பணவரவு போக்கிவிடும்.

**கன்னி:**
சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவர்.

**துலாம்:**
உத்தியோகத்தில் கவனக்குறைவால் சில தொல்லைகளை சந்திப்பீர்கள். சக பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவது பிரச்சனைகளை உண்டாக்கும்.

**விருச்சிகம்:**
ஆலய தரிசனம் செய்ய குடும்பத்தினருடன் வெளியூர் செல்ல திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு திறமையை பாராட்டி முக்கிய பொறுப்புகள் வழங்கப்படலாம்.

**தனுசு:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் நவீன கருவிகளின் துணையோடு பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கூட்டுத் தொழில் சுமாராக நடந்தாலும் விளக்கமான லாபம் குறையாது.

**மகரம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்தில் புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். சம்பள உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கலாம்.

**கும்பம்:**
ஆன்மீகம் தொடர்பான செயல்களில் ஈடுபடுவதால் மனதில் அமைதியை காண்பீர்கள். உத்தியோகத்தில் சகபாளர்களிடம் உங்கள் மதிப்பு உயரலாம்.

**மீனம்:**
தள்ளி வைத்த வேலையை உயர் அதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

## புரட்சியின்றி மக்களுக்கு காணி...

விடுத்துள்ளார். காணி உரிமையைக் கோரி உலகில் பல புரட்சிகள் இடம் பெற்றுள்ள நிலையில், புரட்சியின்றி நாட்டு மக்களுக்கு காணி உரிமையை பெற்றுகொடுக்க முடிந்துள்ளமை தற்போதைய அரசாங்கத்திற்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை அதிலிருந்து மீட்டமை தற்போதைய அரசாங்கம் பெற்றுள்ள முதலாவது வெற்றியாகும் எனத்தெரிவித்துள்ள ஜனாதிபதி 20 இலட்சம் மக்களுக்கான நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அஸ்வெசும வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியமை மற்றும் அரசாங்க ஊழியர்கள் 15 இலட்சம் பேருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கியமை ஏனைய வெற்றியாகுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் இரண்டு வருடம் என்ற குறுகிய காலத்தில் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக இவ்வாறான விரிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமானால், பாராளுமன்றத்தில் அனைவரினதும் ஆதரவு கிடைத்தால் நாட்டை சிறப்பான இடத்திற்கு முன்னேற்றுவது எளிதானது என்றும் அதுதொடர்பில் அனைவரும் சிந்திக்கவேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

'உறுமய' காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் ரங்கிரி தம்புள்ளை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 10,000 விவசாயிகளுக்கு காணி உறுதிப்பத்திரத்தை வழங்கி வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அன்று, வெ ளிநாட்டவர்களுக்கு காணிகள் பெற்றுக் கொடுக்க முடியுமானால் மக்களுக்கு அந்த உரிமையைப் வழங்குவதில் எவ்வித தடையும் இருக்கமுடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 8 ஆவது யோசனையாக உறுமய வேலைத்திட்டத்தின் மூலம் 1935 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. அரசாங்கத்தின் காணிகளில் முழுமையான உரிமையை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. அந்தவகையில் நாட்டு மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே காணி உறுதிப்பத்திரத்தை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் ஜனாதிபதியின் வழிகாட்டலின் மூலம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதன்மூலம் 20 இலட்சம் விவசாய குடும்பங்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும். அந்தவகையில் உறுமய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, இது எனது நாடு. நான் பிறந்த தாய் நாடு.எனது உரிமைகளை உறுதிப்படுத்திய நாடு.அந்த வகையில் இந்த நாட்டு மக்களின் காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தற்போது காணி உறுதிப் பத்திரம் வழங்குவதன் மூலம் நிறைவடைந்துள்ளது. 20 இலட்சம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் செயற்பாடு இடம்பெறுகிறது. இந்த புரட்சியை அனுபவிப்போர் நாட்டு மக்களே.

இந்த காணி உரிமை கிடைத்ததும் நீங்கள் எவருக்கும் அடிமைப் படத் தேவையில்லை. எம்பிக்கள், அதிகாரிகளின் பின்னால் சென்று அனுமதி கோர வேண்டிய அவசியம் கிடையாது.

காணியை தமக்கு தேவையான வகையில் அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்பதுடன் அது தொடர்பில் எவரும் அழுத்தம் கொடுக்க முடியாது. கிடைக்கும் இந்த உரிமையை பாதுகாத்துக் கொள்ளுமாறு நான் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

## 3000 பாடசாலைகளை டிஜிட்டல்...

சுசில் பிரேம ஜயந்த யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கும் செயற்பாடுகளை எதிர் வரும் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றைய தினம், யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய தொழில்நுட்பத்துடன் நேரடி தொடர்புகளை முன்னெடுக்கும் வகையில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். நாட்டில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வியில் சமமான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதே கல்வியமைச்சின் பிரதான நோக்கமெனத் தெரிவித்துள்ள அமைச்சர், அதனொரு அம்சமாகவே இந்த டிஜிட்டல் மயப்படுத்தல் அமையுமென்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு டிஜிட்டல் மயப்படுத்தும் பாடசாலைகள் அனைத்துக்கும் Smart Interactive Board ஐ பெற்றுக்கொ டுப்பதாகவும், இதற்கு சமகாலத்தில் சகல கல்வி வலயங்களிலும் உருவாக்கப்பட்டுள்ள கணனி வள மத்திய நிலையங்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாட்டில் மிக நெருக்கடியான நிலை காணப்பட்டதாகவும் எரிபொருள், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு நீண்டவரிசை காணப்பட்டதாகவும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் பெரும் சவால் நிறைந்த காலகட்டத்தில் தாம், கல்வியமைச்சராக சவால்களை எதிர்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிலையிலிருந்து மீண்டு மீளவும் பாடசாலை கட்டமைப்பை படிப்படியாக முன்னேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தேவையான சரியான தீர்மானங்களை அதற்காக எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தநிகழ்வில் பேராசிரியர் சிவா சிவநாதன், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

## வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை...

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். சுமார் நானூற்று ஐம்பது வருடங்களாக ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிந்திருந்த எமது நாடு, .டி.எஸ்.சேனநாயக்கா உள்ளிட்ட தேசிய மதத் தலைவர்களுடன் உயிர் தியாகம் செய்து, முன்னெடுத்த போராட்டத்தாலே சுதந்திர தேசமாக மாறியது..

நாடு சுதந்திரமடைந்து 76 வருடங்கள் கடந்துள்ளன. கடந்த நான்கு வருட காலத்துக்குள் கொவிட் தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் பிரச்சினை போன்ற விடயங்கள் காரணங்களால்,அராஜக நிலைக்கு நாடு சென்றது.இந்நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை.75ஆவது சுதந்திர தின நிகழ்வு கொண்டாடப்ப டும்போது, மிகவும் துரதிஷ்ட நிலையிலே நாடு இருந்தது. நாட்டை பொறுப்பேற்கும் சவாலை யாரும் ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்திலேயே, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட நாங்கள் நாட்டை பொறுப்பேற்றோம்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையின் கீழ் சுமார் 18 மாதங்களுக்குள் பொருளாதார மேம்பாட்டை நோக்கி முன்னேறியுள்ளோம். 76ஆவது சுதந்திர தினத்துடன் ஆரம்பிக்கும் இந்த வருடத்துக்குள், மக்களின் கஷ்டங்கள் நீங்கக்கூடிய, சௌபாக்கியம் கிடைகுக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## விலையேற்றத்துக்கேற்ப வருமானமும்...

பொருளாதார நெருக்கடியால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையிலே, மத்திய வங்கி ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.இது குறித்து கருத்து வெளியிட்ட மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேலும் குறிப்பிடுகையில்,

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதற்கு ஏற்ற வகையில் நாட்டு மக்களின் வருமானம் இன்னும் அதிகரிக்கவில்லை.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் நிலையிலேயே,இவ்வேதனைகளை உணர நேரிடுகிறது.இந்நிலைமைகள் ஓரளவுக்கு இலகு படுத்தப்பட்டுள்ளதே தவிர, முழுமையாகக் குறைந்துவிடவில்லை.

இதன் நேர்மறையான பிரதிபலன்கள் கிடைப்பதற்கு சில காலம் எடுக்கும். பணவீக்கம் ஆறு வீதமாகக் குறைந்த போதிலும், பொருளாதாரம் ஆறு வீதத்துக்கு இன்னும் வளர்ச்சியடையவில்லை.

மக்களின் வருமானம், பொருட்களின் விலை ஏற்றத்துக்கு ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும். அதற்கு சில காலம் எடுக்கும். அதன் பின்னரே பொருட்களின் விலையேற்றத்திற்கு ஏற்றவாறான வருமானம் மக்களுக்கு கிடைக்கும்.

கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு இயல்புநிலை ஏற்பட அவகாசம் தேவை. இன்னும் அந்நிலைக்கு நாம்,வரவில்லை. இதே பாதையில் பயணிக்க வேண்டுமானால் இந்தப் பாதையில்தான் செல்ல வேண்டும். மாறினால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாக நேரிடும்.

வலி மிகுந்ததாக இருந்தாலும், முடிவுகள் நீண்ட காலம் நீடிக்கும். இதற்கு சிறிது காலம் எடுக்கும். மக்கள் பொறுமையாக இருந்தால் அந்த நிம்மதி அவர்களுக்குக் கிடைக்கும்.இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளான நாடுகள் பல ஆண்டுகள் கடந்தும் இன்னமும் அதிலிருந்து மீளவில்லை. நாம் ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்குள் மீட்சிப் பாதையில் பயணித்துள்ளோம். இந்நிலையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர், தெரிவித்துள்ளார்.

## ஒரே குடும்பத்தினர் பயணித்த...

ஒருவர் உயிரிழந்து, இருவர் காயமடைந்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மூன்று வயது மகள் ஆகியோர் பயணித்த முச்சக்கர வண்டியே, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் மோதி விபத்துக்குள்ளான தாக ஹொரண தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம, ரைகம கொஸ்வத்தபர பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான ஆர்.ஏ.தனுஜா பிரிய தர்ஷனி என்ற 40 வயது பெண்ணே, விபத்தில் உயிரிழந்துள்ளார். தமது மகளின் தேவைக்காக ஹொரண நகருக்கு வந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலே, இவ்விபத்து இடம்பெற்றது.இவர்களை,பிரதேச வாசிகள் இணைந்து வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும்,அங்கு தாய் உயிரிழந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

காயமடைந்த சிறுமியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அவசர சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் மருத்துவமனை பேச்சாளர் தெரிவித்தார்.தந்தையின் வலது கை, கழுத்து மற்றும் மார்பில் காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## தப்பியோடி கைதாகியோருக்கு...

மோதலையடுத்து, வெலிக்கந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 14 கைதிகள் பொலன்னறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை (08) வரை விளக்கமறியலில் வைக்குமாறு மஜிஸ்திரேட் நீதவான் ஜி.பி.டி. சந்தரேகா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி மோதல்களின் போது காயமடைந்துள்ள 10 பேர் மற்றும் மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தலையீடு செய்த இராணுவ வீரரொருவரும் வெலிக்கந்தை மற்றும் பொலன்னறுவை அரசாங்க வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பியோடி சோமாவதி புனித பிரதேசத்திற்கு அருகில் சுற்றுலா விடுதியொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் வண்டியொன்றை கொள்ளையிடுவதற்கு முயற்சித்தமை மற்றும் பாதுகாப்பு அதிகாரிக்கு கத்தியினால் தாக்குதல்களை மேற்கொண்டு காயங்களை ஏற்படுத்தி அவரிடமுள்ள 5,000 ரூபாவையும் கையடக்கத் தொலைபேசியையும் அபகரித்துள்ளமை தொடர்பில் 21 கைதிகள் புலஸ்திபுர பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களை பொலன்னறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலஸைார் தெரிவித்துள்ளனர்.

## போக்குவரத்து தொழில்நுட்பங்களை...

கோயலின் (Piyush Goyal) சிறப்பு அழைப்பினை ஏற்று இந்தியா சென்ற அமைச்சர் இம்மாநாட்டில் பங்கேற்றார்.

மூன்று நாள் நடைபெறும் இக் கண்காட்சியில் ஏராளமான இந்திய மற்றும் சர்வதேச வாகன உற்பத்தியாளர்கள், மற்றும் முதலீட்டாளர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள் உட்பட தொழில் முனைவோர் தங்கள் தயாரிப்புகள் மற்றும் வடிவமைப்புகளை காட்சிப்படுத்தியுள்ளனர். போக்குவரத்துக்கான எதிர்கால முக்கிய துறைகளை ஒரே தளத்திற்கு கொண்டு வரும் நோக்கின் கீழ் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மோட்டார் வாகனங்கள் மற்றும் போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள எண்ணூறுக்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டினரும் இதில் கலந்து கொண்டனர். கண்காட்சியுடன் இணைந்ததாக பல்வேறு தலைப்புகளில் தொழில் துறை தலைவர்கள் பங்கேற்புடன் 20 மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மோட்டார் வாகனத் துறையில் தொழில்நுட்ப தீர்வுகள், கட்டுமான உபகரணங்கள், கலப்பின மற்றும் மின்சார வாகனங்கள் பல அம்சங்களின் கீழ் அதற்கான கூடங்கள் அமைக்கப்பட்டி ருந்தன. மேலும் மோட்டார் வாகனத் துறையில் இந்தியா அடைந்துள்ள வெற்றியை உலகுக்கு எடுத்துரைப்பது இக் கண்காட்சியின் மற்றொரு நோக்கமாக இருந்தது. போக்குவரத்துத் துறைக்கு ஏற்ற வகையில் வழங்கப்பட்ட பல தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் தயாரிப்புகளும் இங்கு வெளியிடப்பட்டன.

கண்காட்சியில் கலந்து கொண்ட அமைச்சர், அதிநவீன பயணிகள் போக்குவரத்து பஸ்கள் உட்பட இலங்கை உட்பட பல நாடுகளில் மோட்டார் வாகன உற்பத்தி துறையில் முதலீடு செய்துள்ள நிறுவனங்களின் புதிய தயாரிப்புக்களை அவதானித்ததுடன், இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் பல முன்னணி நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

## விவசாயிகளின் கணக்குகளில்...

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேலும் 450 மில்லியன் ரூபாவை விவசாயிகளின் கணக்குகளில் வரவு வைக்கவுள்ள தாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## நிதி மோசடி சம்பவங்கள்...

தொடர்பான தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கிணங்க ஆறு நிறுவனங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் கீழ் 318 கோடி ரூபா மேலதிக வரியை அரசாங்கத்திற்கு அறவிட முடிந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன்...

விக்கிரமசிங்க, அதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடினார். அமைச்சரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி, அதற்கு இணக்கம் தெரிவித்ததுடன் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## புற்றுநோயால் பாதிக்கப்படும்...

முன்னர் 450 ஆக இருந்த நிலையில், ஒரு வருடத்தில் இத்தொகை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாவதால் ஏற்படும் உடல் சோர்வு, புற்றுநோய் உள்ளிட்ட தொற்று நோய்கள் அதிகரிப்பதற்கான காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் எச்சரித்துள்ளார்.சிறுவர்களுக்கு மத்தியில் இரத்தப்புற்றுநோய், மூளைப் புற்றுநோய் போன்ற நோய்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்நோய்களிலிருந்து விடுபட குழந்தைகளை இனிப்பு பானங்கள் மற்றும் சிற்றூண்டிகளில் இருந்து விலக்கி வைப்பது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் தாய்ப்பாலூட்டுவதே, புற்றுநோயில் இருந்து விடுபட நல்ல வழி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கட்சியை விமர்சிப்போருக்கு...

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் (ஓய்வுபெற்ற) தயா ரத்நாயக்கவை கட்சியின் மூத்த ஆலோசகராக நியமிக்க சஜித் பிரேமதாச எடுத்த தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர் பொன்சேகா விமர்சித்திருந்தார்.இவ் விமர்சனம் வெளியாகி சில நாட்களுக்குப் பின்னர்,எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாசவின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

இது குறித்து சஜித்பிரேமதாசா தெரிவித்ததாவது, "யாருக்கு கட்சி உறுப்புரிமை வழங்க வேண்டும் என்று எவரும் எனக்குச் சொல்ல வேண்டியதி ல்லை. எனக்கு அறிவுரை கூற முயல்பவர்களை நான், புறக்கணித்து விடுவேன். கட்சியை விமர்சிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்.

கட்சியைப் பாதுகாப்பதும், எதிர்காலத் தேர்தல்களில் வெற்றியை நோக்கி நகர்த்துவதும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் கடமையாகும். இக் கடமையைச் செய்ய முடியாதவர்கள் வெளியேற வேண்டும். எனது தந்தைக்கும், எனக்குமிடையே ஒற்றுமையை வரைய சிலர் முயற்சிக்கின்றனர். இருப்பினும், எனது தந்தையின் அபிவிருத்தி மாதிரியை மட்டுமே நான்,ஏற்றுக் கொள்கிறேன். தமக்கும் தமது தந்தைக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சித் தலைவர் –இந்திய புதிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



இந்தியாவின் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா (Santosh Jha) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவிவரும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

வரிகொள்கையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், ஜனநாயக உரிமைகள் தொடர்பான பல்வேறு விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில், இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டு பிரதானி சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.



கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வருடாந்த சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இரண்டாவது தடவையாகவும் 'கோட்டேஅங்கம்பிட்டிய' மைதானத்தில் நேற்றுமுன்தினம் (04) நடைபெற்றது. இதில் கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் அடங்கிய 8அணிகள் போட்டியிட்டன. இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் அணி சம்பியன் கிண்ணத்தை வெற்றிக் கொண்டது. இப்போட்டியில் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்தூவ, அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:எம்.நஸார்)

# பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

***(திறப்பனை தினகரன் நிருபர் )***



கலாவெவ அழக பெருமாகம முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து, கடந்த 2023 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த (சாதாரண) தர பரிட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்குமான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்குகின்ற நிகழ்வும் அதிபர் ஏ.எல்.எம்.லாபீர் (நளிமி ) தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இப்பலோகம கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். எம். நிசாம் இந் நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இங்கு அநுராதபுர மாவட்ட முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், அநுராபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானின் இணைப்பாளருமான வசீம் மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.


## INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**
**VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA, MANIPAY**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received **Grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project (LDSP)**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the works stated in the Table below.

2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP)** on behalf of the **Valikamam south west Pradeshiya Sabha, Manipay** now invites sealed bids from eligible and qualified bidders for the works stated in the Table below.

| No | Contract No | Contract Name | Contract Period (Days) | Bid Validity Period | Bidding document fee (Rs) | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VSWPS/2024/PT3/02 | Purchasing of Furniture & Equipment for Sub office of Valikamam South west Pradeshiya sabha at Mathagal ( Chairs-400, Front Table -4, Curtain, Sound system, Moving stage) | 60 | 06-May-2024 | 1,500.00 | 23,500.00 | 03-June-2024 |
| 02 | LDSP/NP/JAF/VSWPS/2024/PT3/04 | Purchasing of Vehicles for Solid waste Management for Valikamam South west Pradeshiya sabha – Garbage Compactor Vehicle- 01 | 90 | 20-May-2024 | 3,500.00 | 147,000.00 | 17-June-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. Qualification requirements include: to qualify for contract award are included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents.
5. Interested eligible bidders may obtain further information from **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay. (T.P No: 021 225 5381 , Fax No: 021 225 6643)** and inspect the bidding documents at **Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **06-Feb-2024** until **04-Mar-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **06-Feb-2024** until **04-March-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee mentioned on the above table.The method of payment will be **by cash.**
7. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna road, Manipay, Jaffna** on or before **10:30** Hrs on **05-March-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.
9. The Pre-Bid Meeting will be held at **Valikamam South West Pradeshiya Sabha**, **Jaffna road, Manipay, Jaffna** on 20th February 2024 at 11:00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Valikamam South West Pradeshiya Sabha,**
**Jaffna road, Manipay,Jaffna.**

**06.02.2024.**


# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய ஏற்பாட்டில் கொழும்பில் காஷ்மீர் நட்புறவு தின கருத்தரங்கு







**(தெஹிவளைகல்கிஸ்ஸை விஷேட நிருபர்)**

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், காஷ்மீர் நட்புறவு தினக் கருத்தரங்கும் புகைப்படக் கண்காட்சியும் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் நேற்று இடம்பெற்றது.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வில் வெளிநாட்டு தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன்விரும்பிகள் மற்றும் இலங்கை ஊடக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் காஷ்மீர் நட்புறவு தினச் செய்திகள், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தக இணைப்பாளரால் வாசிக்கப்பட்டதோடு நிகழ்ச்சி ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் முக்கிய பேச்சாளர்களாக ஷிராஸ் யூனாஸ், பொருளாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் சபை உறுப்பினர் திருமதி சூரியா ரிஸ்வி, இளம் முஸ்லிம் பெண்கள் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை வலியுறுத்திய அனைத்து பேச்சாளர்களும் சமய நல்லிணக்கம் மற்றும் அனைவரினதும் அமைதியான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பதில் உயர் ஸ்தானிகர் வாஜித் ஹசன் ஹஷேமி, காஷ்மீர் மக்களுடன் எப்போதும் தோளோடு தோள் நின்று துணை நிற்போம் என்ற பாகிஸ்தான் அரசு மற்றும் மக்களின் உறுதிப்பாட்டினை வலியுறுத்தினார்.

# வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

***(யாழ்.விசேட நிருபர் )***



வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன், யாழ் மத்திய கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில்,வடமாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மத்திய அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண அமைச்சின் அதிகாரிகள், கல்வித்துறைசார் உத்தியோகஸ்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலேயே இக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

அந்தவகையில், கடந்த ஐந்து வருடங்களில் யாழ் மாவட்ட மாணவர்கள், தரம் ஐந்து, சாதாரண மற்றும் உயர் தரங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ் மாவட்டத்தில் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலை தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன விடயங்களை தெளிவுபடுத்தினார். அதிபர்கள் நியமனத்தில் எழுந்த சிக்கல்கள், ஆசிரியர் இடமாற்றங்களில் காணப்படும் சிக்கல்கள், தளபாட வசதிகள் இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன் போது தெளிவுப்படுத்தினார்.


## NALLUR PRADESHIYA SABHA

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the WORLD BANK & EU towards the cost of Local Development Support Project, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the goods stated in the Table below.
2. **The Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the goods stated in the Table below.
3. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
4. Interested eligible bidders may obtain further information from **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil (T.P No: 0212222700, Fax No: 0212220138)** and inspect the bidding documents at **Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **6-Feb-2024 until 3-March-2024** between **09:00 AM** to **02:00 PM** on public working days.
5. Qualification requirements include: to qualify for contract award are included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address "**Secretary, Nallur Pradeshiya sabha, 14/5 Karuvapulam Road, Kokuvil"** on Public Working Days between **09:00 AM** to **02:00 PM** from **6-Feb-2024 until 3-March-2024** and upon payment of a non-refundable fee stated in the Table below. The method of payment will be **Cash or Card.**
7. Bids must be delivered to **The Chairman, Local Authority Procurement Committee, Nallur Pradeshiya sabha 14/5 Karuvapulam Road, Kokuvil** on or before **4-March-2024** at **10.00AM**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person. All bids must be accompanied by a Bid-Security and the validity periods of bid security as given below.
8. The complete bid should be forward in two copies as original and duplicate. The Original and Duplicate should be enclosed separately and mark original and duplicate respectively in sealed envelopes. Both envelopes should be marked the "**Bid Number**" on top left-hand corner of the envelop.
9. The pre bid meeting will be held at **Nallur Pradeshiya sabha** on **19-Feb-2024** at **10.00AM**. Interested Bidders may participate in this meeting their own expenses.

| Bid No | Name of Procurement | Bid Form Fee | Period of Contract | Bid validity Period from the date of opening | Bid security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required Period |
| LDSP/NP/JAF/NPS/2024/BT4/02 | Provision of Learning Materials to Pre-Schools (72 no's of Tables and 288 no's of Chairs for Preschool Children) | 3,000.00 | 60 Days | 63 days (05-May-2024) | 60,000.00 | 02-June-2024 |
| LDSP/NP/JAF/NPS/2024/PT3/04 | Purchasing of Furnitures for Kokkuvil Sub Office Building & Conference Hall | 3,000.00 | 60 Days | 63 days (05-May-2024) | 50,000.00 | 02-June-2024 |
| LDSP/NP/JAF/NPS/2024/PT3/02 | Procurement of Truck Mounted Water Bowser with the Water Tank | 6,000.00 | 60 Days | 77 days (19-May-2024) | 190,000.00 | 16-June-2024 |

The Chairman
Local Authority Procurement Committee
Nallur Pradeshiya sabha
14/5 Karuvapulam Road
Kokuvil

06-Feb-2024

# கிழக்கின் குரல்



## பொருளாதார முன்னேற்றத்துக்காக சகலரதும் அர்ப்பணிப்புக்கள் அவசியம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபை ஏற்பாடு செய்த 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்,மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி தலைமையில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா சுதந்திர சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றது."புதிய தேசம் அமைப்போம்" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இச்சுதந்திர தின நிகழ்வில்,பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட பிரதேச அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாக பங்கேற்றார்.

இதில் உரையாற்றிய அவர்:

நமக்கான சுதந்திரத்தை பெற்றுத் தருவதற்கு உழைத்த பெருமகன்கள் சகல சமூகங்களிலும் உள்ளனர். இதில் பிராதான பங்காற்றிய பெருமகன் டீ.எஸ்.சேனநாயக்க

ஆவார்.இவர்கள் உள்ளிட்ட நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர் நீத்த சகலருக்கும் இன்று மரியாதை செலுத்து கிறோம்.எல்லோரதும் உழைப்பால் கிடைத்த சுதந்திரம் எல்லோருக்கும் கிடைக்கிறதா? என்ற ஆதங்கம் சிலருக்கு உள்ளது. அந்நிய சக்திகளின் தலையீடுகளால்தான்,

இந்நிலை ஏற்படுகிறது.எமது வளங்களைசு சுரண்ட நினைக்கும் சக்திகள்,நமது சமூகங்களை பிரித்தாள முயற்சிக்கின்றன.இதற்கு இடம்கொடுக்காமல் விழிப்புடன் செயற்பட வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது.

எனவே,நமது நாட்டு வளங்களை சரியான முறையில் பாவித்து, ஏற்றுமதித்துறையில் முன்னிலை நாடாக

வளர நமது அர்ப்பணிப்புக்கள் அவசியம்.ஜனாதிபதியும் அரசாங்கமும் இதற்கான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துகிறது. அரசாங்கத்தின் இத்திட்டங்கள் வெற்றியளிப்பதற்காக நாட்டுப்பற்றுடன் செயற்படுவது அவசியம் என்றார்.





தனியார் நிறுவனங்களின் தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், மும்மத தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், கழகங்களின் அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெருந்தொகையான பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை, தமிழ் முஸ்லிம் மற்றும் சிங்கள பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன.

## ஜனாஸா நலன்புரி புதிய காரியாலயம் திறந்து வைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் புதிய காரியாலயத் திறப்பு விழா,நேற்று (04) வைத்தியசாலை தெற்கு வீதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. சாய்ந்தமருது வைத்தியசாலை தெற்கு வீதியில் அமைந்திருந்த பழைய கட்டடம் , முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நினைவாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, இக்காரியாலயம் திறக்கப்பட்டது.இதையடுத்து, சாய்ந்தமருது பிரதேச செயலாளரிடம் இக்கட்டடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், ரிஸ்லி முஸ்தபா கல்வி உதவி அமைப்பின் தலைவர் எம். றிஸ்வி முஸ்தபா, சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், மாளிகைக்காடு கிளையின் தலைவர் மௌலவி எம்.எம். எம். சலீம் (ஷர்க்கி), சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டு கழக, சமூகசேவை அமைப்பின் தலைவர் எம்.எம். றியாஸ் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.

## இளம் சைவப் பண்டிதர் பட்டம் பெற்று பெருமை

(ஆரையம்பதி தினகரன் நிருபர்)

அகில இலங்கை சைவப் பண்டிதர் சபையால் (2023) நடாத்தப்பட்ட சைவப் பண்டிதர் பரீட்சையில் கல்முனை நாவிதன் வெளிப் பிரதேசத்தை சேர்ந்த குலசிங்கம் சுபாஷ்கர் சித்தியடைந்துள்ளார்.இதையடுத்து

இவருக்கு இளம் சைவப் பண்டிதர்களுக்கான பட்டமும் வழங்கப்பட்டது. மட்டக்களப்பு தமிழ் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவிலேயே இவருக்கு

இப்பட்டம் வழங்கப்பட்டது. அறநெறி ஆசிரியரான இவர், ஆலயங்களில் பிரதம பூசகராகவும், சிறந்த ஆன்மீக சொற்பொழிவாளராகவும் மற்றும் சமூக சேவையாளர் என்ற பன்முகத் திறமையும் பெற்று மக்கள் மத்தியில் சிறந்த நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## திறமைக்கான தேடல் விருது விழா பல்துறை சாதனையாளர்கள் பங்கேற்பு

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் ஸ்ரீலங்காவின் 27 வது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற "திறமைக்கான தேடல் மகுடம் சூட்டும் விழா" சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி ஏ.எல்.அன்சார் தலைமையில் (03) நடைபெற்ற இந் நிகழ்வில், நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் "திறமைக்கான தேடல் விருதை பெறத் தகுதியான கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கலைஞர்களின் கலை, இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் விருதுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் மீஸான் பவுண்டேஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் எஸ்.எல். எஸ்.முஹீஸ், ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், மல்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் நஸ்லின் ரிப்கா அன்சார், தொழிலதிபர்களான எஸ்.எச்.எம். ஜிப்ரி, ஏ. ஆர். மு ஹம்மது கியாஸ், லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் ஸ்ரீலங்காவின் அமைப்பாளர் கலாபூசணம் எம்.அருளம்பலம் உட்பட, கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

( கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சம்மாந்துறையில் அமைந்துள்ள, தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்துக்கு முன்னால், நேற்று முன்தினம் (03) காலை இடம்பெற்ற விபத்தில் 12 வயதுச்சிறுவனான ஹாறுன் பாசிர் உயிரிழந்தார். இதையடுத்து வாகன சாரதியைக் கைது செய்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலர் பாடசாலை விடுகை விழா

நிந்தவூர் 'Y Two K' பாலர் பாடசாலையின் விடுகைவிழா, முகாமையாளரான ஏ.எச்.எம்.லாபிர் தலைமையில், அண்மையில் நடந்தது.

கமு/அல் பதுரியா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.ஏ. எம்.அஷ்ரப் தாஹிர், கமு/ அல்

பதுரியா வித்தியாலய அதிபர் திருமதி அப்துல் ஜப்பார், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.அஷ்பர் (ஜேபி), நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஏ.எல். றியாஸ் ஆதம், ஓய்வு நிலை ஆசிரியர் எம்.ஏ. மசூர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.எச்.எம்.நாளிர் ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## தொழுநோய் தினத்தினை முன்னிட்டு வளத்தாப்பிட்டியில் நடமாடும் சேவை





(பாலமுனை விசேட நிருபர்)

உலக தொழுநோய் தினத்தினை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்த நடமாடும் வைத்திய சேவை, அண்மையில் வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு இந்நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தது.

பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம். பஸால், இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கினார். பிராந்திய சுற்றுச் சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம்.கபீர், உதவி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி ஜீவராணி சிவசுப்ரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்களுக்கு சிகிச்சையளித்தனர்.

## அஸ்ஸபா கனிஷ்ட வித்தியாலய புதிய அதிபராக நழீம் நியமனம்



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

பள்ளிக்குடியிருப்பு அக்/ அஸ்ஸபா கனிஷ்ட வித்தியால புதிய அதிபராக அஷ்ஷேய்க் ஏ,கே,நழீம் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதற்கான கடிதத்தை இவரிடம் கையளித்தது. இந்நிலையில், இவர் நேற்று (05) கடமையை பொறுப்பேற்றார்.

அஸ்ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் எஸ். எம்.லாபீரின் நெறிப்படுத்தலில், அதிபரின் பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.இந்நிகழ்வில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.எச்.பௌஸ், அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜீ.பஸ்மில், அட்டாளைச்சேனை அல் மினா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், பள்ளிக்குடியிருப்பு முஹம்மதியா வித்தியாலய அதிபர் எம்.ஏ.நபுஹர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.சாஹிர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு ஆளுநர் விஜயம்

ரோட்டரி இலங்கை மாவட்ட 3220 ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம் (04) திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு விஜயம் செய்தார். ஆளுநரின் செயலாளர் வேலுப்பிள்ளை ரமணா மற்றும் உதவி ஆளுநர் ரோய் சத்தியசுதாகர் ஆகியோரும் இவ்விஜயத்தில் இணைந்திருந்தனர்.

ஆளுநர் மற்றும் அதிதிகளை திருகோணமலை ரோட்டரி கழக தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.சௌந்தரராஜா வரவேற்றார்.செல்வ இசை நடன சபா மாணவிகள் வரவேற்பு நடனம் ஆடினர். செயலாளர் என்.டி. ரகுராம் 2023, 2024 வரையிலான செயல்பாடுகள் பற்றி சுருக்கமாக விளக்கமளித்தார். இந்நிகழ்வில், விஹ்ராஜ் சௌந்தரராஜா அழகிய பாடல் மூலம் இசையை வழங்கினார். இங்கு தகுதியான நான்கு குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன், தி/ இறால் குழி கஜமுஹா வித்தியாலய அதிபரிடம் பயிற்சிப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டன. செவிப்புலன் குறைபாடு உள்ளோருக்கு சிகிச்சை வழங்குவதற்காக ஸ்கை ரூட் டிராவல்ஸ் நிதியுதவியுடன் ரூபா 250,000 நிதியுதவியும் வழங்கப்பட்டது.ரோட்டரி கழக பராமரிப்பாளர் திரு. மருதுவின் முழுமையடையாத வீட்டை பழுதுபார்ப்பதற்கென, 45000.00 ரூபா உதவி வழங்கப்பட்டது. ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைககளை பாராட்டியதுடன் மேலும் தரமான இளம் உறுப்பினர்களை சேர்க்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.



நாட்டின் 76 ஆவது,சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நாடு முழுவதும் நடைபெற்ற நிலையில்,காரைதீவு பிரதேச செயலகத்திலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன.பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடந்த வைபவங்களில் முக்கியமான மரநடுகை நிகழ்வை படத்தில் காணலாம்.

படங்கள் காரைதீவு குறூப் நிருபர்

# வடக்கின் உதயம்

# யாழ். சரவணை, பொன்னி ஆலயத்திலிருந்து கதிர்காமம் வரை பவனி வர தேர்

கதிர்காமம் யாத்திரைக் காலத்தில், யாழ். சரவணை, பொன்னி திருத்தலத்திலிருந்து செல்வச்சந்நிதியூடாக கதிர்காமம் வரை பவனி வருவதற்கான சித்திரத் தேரொன்று நிர்மாணிக்கப்படுகிறது. இத்தேரை அமைப்பதற்கான திருப்பணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தேரின் நிர்மாணப் பணிகள் இடம்பெறுகின்றன.

வவுனியா, தோணிக்கல், மேகலா சிற்பாலய ஸ்தபதி விஸ்வபிரம்மஸ்ரீ முருகேசு மேகநாதன், விஸ்வபிரம்மஸ்ரீ மேகநாதன் தனவேந்திரன் ஆசாரி தலைமையில் இந்த தேர் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

சித்திரத்தேருக்கான நிதி திரட்டல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தினகரன் அலுவலகத்துக்கு விஜயம் செய்த சைவ சமய திருவடியான், திருநீற்றுச் சித்தர், தவத்திரு




நா.க.சி.கணபதி கதிரவேல் ஆசிரிய பீடத்தினருக்கு ஆசி வழங்கினார்.

41 அடி உயரமான இந்தத் தேரை செய்வதற்கு 41 இலட்சம் ரூபா தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது. தேக்கு, வேம்பு, மருத மரங்களைக் கொண்டு இத்தேர் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தேரின் திருப்பணி வேலைகளை 7 மாத காலங்களில் முடிக்கலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இத்தேரை செய்வதற்கு நிதியுதவி அளிக்கக்கூடிய பக்தர்களிடமிருந்து உதவிகள் கோரப்படுகின்றன. உதவிகளை 19002009856 என்ற ஹட்டன் வங்கியிலோ அல்லது 92110492 என்ற இலங்கை வங்கி கணக்கிலோ வைப்பிலிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவருடன் தொடர்பு கொண்டு உதவி செய்ய விரும்புவோர் 0779462662, 0743433443, 0774574565 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கோரியுள்ளோர்.

# தொடர் காய்ச்சலினால் முல்லைத்தீவு பெண் யாழில் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

தொடர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த அன்ரன் அனிஸ்ரலஸ் (வயது 53) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் , மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

# யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தில் இரத்ததானம்



சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாண கிளை ஆகியவற்றுடன் இணைந்து கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலையின் அனுசரணையுடன் முன்னெடுத்த மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு 03/02/2024 சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 60மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புகைத்தல் எதிர்ப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதியில் மாணவர்களுக்கு புத்தகப்பை

யாழ்.விசேட நிருபர்

யாழ். வேலணை பிரதேச செயலகத்தினால் சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து 400 பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வேலணை, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 11 மணிக்கும், புங்குடுதீவு சமுர்த்தி வங்கி வலயத்தில் மாலை 2 மணியளவில் இரு நிகழ்வுகளாக இடம்பெற்றன.

பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் F.C.சத்தியசோதி, கண்வைத்திய



நிபுணர் வைத்தியர் சந்திரகுமார், Green Layer Environmental Organization இயக்குனர் P.சசிகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

நிகழ்வில் மாணவர்களுக்கான புத்தகப் பைகளுடன் தென்னங்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

# மலைச்சாரல்

# இந்து கலாசார அறக்கட்டளை மன்றத்தின் பொங்கல் விழா



(பலாங்கொடை தினகரன் நிருபர்)

"இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்" என்ற தொனிப்பொருளில் பலாங்கொடை இந்து கலாச்சார அறக்கட்டளை மன்றத்தின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தமன்று பலாங்கொடை நகர சபை விளையாட்டு மைதானத்தில் பெருந்திரளான இந்து மக்களின் பங்களிப்பில் தைப்பொங்கல் விழா கோலாகலமாக நடைபெற்றது.

பலாங்கொடை நகரில் உள்ள அனைத்து தமிழ் மக்களின் வியாபார நிலையங்கள் மூடப்பட்டு வர்த்தகர்கள் இந்த தைப்பொங்கல் விழாவில் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

பலாங்கொடைப் பகுதியிலுள்ள அனைத்து தோட்டங்களிலும் வசித்து வரும் இந்து மக்களும் பாடசாலை அதிபர்கள் மற்றும் அரச நிறுவனங்களில் கடமையாற்றும் சகல இந்து மக்களும் இந்த தைப்பொங்கல்வைபவத்தில்காலைமுதல் மாலை வரை பங்கு பற்றியமை விசேட அம்சமாகும்.

முதல் தடவையாக பலாங்கொடைநகரில்தைப்பொங்கல்விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. மாணவ மாணவிகளின் கலை கலாச்சார நிகழ்வுகளும் அன்றைய தினம் இடம்பெற்றன. சுதந்திர தினமன்று இந்த தைப்பொங்கல் விழா இடம் பெற்றமையால் இது ஒவ்வொரு வருடமும் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கும் என இந்து மக்கள் தெரிவித்தனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் அறநெறி பாடசாலை மாணவர் வரவு 60% வீதம் வீழ்ச்சி

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

ஞாயிற்றுக்கிழமை தினங்களில் அறநெறி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 60% வீத மானோரின் வரவு வீழ்ச்சி அடைந்துள்ளதாக ஒப்ப நாயக்க பிரதேச செயலாளர் தம்மிக சதரசிங்க தெரிவித்தார். இந்த நிலைமைக்கு காரணம் மாணவர்கள் டியூஷன் வகுப்புகளுக்கு செல்வதாகும் என பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 2,21000 மாணவர்களில் தற்பொழுது அறநெறி கல்வியினை 51,000 மாணவர்கள் மட்டுமே பெற்று வருவதாக இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்தில் தெரிவித்த பிரதேச செயலாளர், இவ்வாறு மாணவர்கள் அறநெறி கல்வியினை பெற்றுக்கொள்ளாமல் விடுவதால் எதிர்காலத்தில் மாணவர்கள் வழி தவறி விடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நாட்டில் காலையில் டியூசன் வகுப்புகள் நடைபெறாவிட்டாலும் அந்த டியூஷன் வகுப்புகள் பகல் 12 மணி அல்லது ஒரு மணி ஆகும் போது ஆரம்பமாவதால் மாணவர்கள் அறநெறி பாடசாலைக்கு செல்வதற்கு ஆர்வம் காட்டுவதில்லை என ஆய்வின் போது அறிய முடிந்துள்ளதாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

சில நிறுவனங்கள் மூலம் மாணவர்களுக்கு போதைப் பொருளினை பெற்றுக் கொடுக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்டத்தில் இந்த நிலைமை காணக்கூடியதாக உள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.



மடவளையில் சிவில் சமூக அமைப்புக்கள், மடவளை ஜும்ஆப் பள்ளிவாசல், மடவளை மதீனா தேசிய பாடசாலை ஆகியன இணைந்து நடத்திய இலங்கையின் 76 வது தேசிய சுதந்திர தின விழா மடவளை மதீனா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் எம். எஸ். எம். அஸ்லம் கலந்து கொண்டு சிறப்பித்தார். இத்தினத்தை முன்னிட்டு மடவளை மதினா தேசிய பாடசாலையின் வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன. பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

இக்பால் அலிமடவளையில்

# பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

நோர்வூட் பொலிஸ் பிரிவில் உள்ள நியூட்டன் தோட்டத்தில் கடந்த 03 ம் திகதி தோட்ட காணியில் இருந்த கருப்பந்தைல மரத்தை வெட்டிய போது மரம் சாய்ந்து மேலும் ஒரு மரத்தின் மீது விழுந்துள்ளது. அவ் வேளையில் அதன் கிளை ஒன்று அவ் வீதியூடாக சென்ற நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் முருகன் அஷான் என்பவர் மீது விழுந்துள்ளது. அவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லபட்டு அங்கு சிகிச்சை பெற்று



வந்த வேளையில் மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட வேளையில் நாவலப்பிட்டிப் பகுதியில் மரணமாகியுள்ளார். பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு

# கண்டி, மஹியாவயில் குடியேற்றப்பட்டு 197 வருடங்கள் பூர்த்தி



தென் இந்தியாவில் இருந்து பெருந்தோட்டத் துறைக்கு தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து தற்போது 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. அதற்கு இணையாக கண்டி, மஹியாவ பகுதியிலும் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டனர். அவ்வாறு முதன் முதலாக மஹியாவ பகுதியில் குடியமர்த்தப்பட்டு இன்றைக்கு 197 வருடங்களாகின்றன என இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியம் சார்பாக அதன் தலைவர் தேசபந்து எம். தீபன் தெரிவித்தார். (1827 முதல் 2024 வரை). அந்த அடிப்படையில் 197 வது வருட பூர்த்தி விழா மஹியாவயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இவ்வைபவம் மஹியாவ ஸ்ரீ காட்டுமாரியம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது. அதில் விசேட பூஜை ஒன்றும் இடம் பெற்றது. அதன் போது இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் தேசபந்து எம். தீபனால் ஆலய தலைவர் ஆறுமுகம் அவர்களும், மஹிய்யாவ குடியிருப்புக்கள் சார்பாக சமூக சேவையாளர் செல்வ ராஜீம் கௌரவிக்கப்பட்டனர்.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்






நுவரெலியா தினகரன் நிருபர்

இலங்கையின் 76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் (04.02.2024) நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியின் சௌமிய கலையரங்கத்தில் 100 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் 100 மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம் மேற்கொண்டிருந்தார்.

அனுசரணையை கெத்சமனே ஆலயத்தின் போதகர் குமார மென்டிஸ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர். இங்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்படுவதை படங்களில் காணலாம்.

# ஓய்வுபெற்ற இந்திய உதவித்தூதுவர் நடராஜன் எழுதிய நூல் வெளியீட்டுவிழா கண்டியில்

கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயம் நூற்றாண்டை நிறைவு செய்து அதனை பல்வேறு நிகழ்வுகளாகக் கொண்டாடி வரும் தருணத்தில் அங்கு இந்தியாவின் இராஜதந்திரியாகக் கடமையாற்றிய எத்தனையோ உதவித் தூதுவர்களை மலையக சமூகம் கண்டிருந்தாலும், ஏ. நடராஜன் அவர்களை கண்டி வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ ஆகிய அனைத்து சமூகத்தினரும் எக்காலமும் மறந்துவிடப் போவதில்லை. அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் பெருமதிப்புமிக்கவராகத் திகழ்ந்தவர் அவர்.

ஏ. நடராஜன் அவர்கள் இலங்கையில் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயங்களில் உதவித்தூதுவராகக் கடமையாற்றிவிட்டு இந்தியா சென்று வாழ்ந்து வந்தாலும், அவர் இலங்கையில் வாழ்ந்த காலத்தின் வரலாற்றை எழுதி ஒரு நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார். அது தொடர்பில் சமூகப் பணியாளர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் அவர்கள், நடராஜன் எழுதிய நூலை கண்டியில் வெளியிட்டு வைத்து விழா செய்வோம் என கோரிக்கை விடுத்திருந்தார். அதற்காக கண்டியில் டெவோன் ஹோட்டலில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தார். அதன் போது அந்நூல் வெளியீட்டு விழாவுக்கான விசேட ஏற்பாட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் தலைமையில் பேராசிரியர் துரை மனோகரன், கண்டி வர்த்தகப் பிரமுகர் பெ. பழனியப்பன், வர்த்தக சங்கத்தின் தலைவர் பி. குமாரதாஸ், பொருளாளர் சிவசுப்பிரமணியம், முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் பொருளாளர் அஹமட், மலையக கலை கலாசார சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ராஜ ஜெய்கின்ஸ், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. இ இராமன், இந்து இளைஞர் மன்றத் தலைவர் வைதீஸ், கண்டி முத்தமிழ் சங்கத்தின் செயலாளர் சிவகுமார், கண்டி தமிழ் சங்கத்தினர் மற்றும் இக்பால் அலி, மலையக கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



அதன் போது நடராஜனின் நூலை கண்டியில் மிகவும் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்றன . அவருடைய நூல் வெளியீட்டு விழா கண்டியில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.



அந்நிகழ்வு தொடர்பில் ஏற்பாட்டுக் குழுவின் ஒருவரான மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தினகரனுக்கு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

கண்டி மற்றும் யாழ்ப்பாண உதவி ஸ்தானிகராலயத்தின் உதவித் தூதுவராகக் கடமையாற்றி ஓய்வு நிலை பெற்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த ஏ. நடராஜன் அவர்கள் எழுதிய 'பொரம் த விலேஜ் டு த குளோபல் ஸ்டேச்' (அனுபவ வாழ்க்கை குறிப்பு) ஆங்கில நூல் வெளியிட்டு விழா கடந்த 03.02.2024 சனிக்கிழமை பி. ப. 4.00 முதல் 5.30 வரையிலும் பேராதனை தாவரவியற் பூங்காவுக்கு முன்னால் உள்ள பேராதனை ரெஸ்ட் ஹவுஸ் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்.

சமூகச் செயற்பாட்டாளர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் அவர்களின் வரவேற்புரையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் நூல் பற்றிய கருத்துரையினை பேராதனை பல்லைக்கழக சட்டத் துறைப் பேராசிரியர் நெலும் தீபிகா உடகம அவர்களும், நூல் பற்றிய அறிமுகவுரையினை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சரத் பி. எஸ். அபயக்கோன் அவர்களும் ஏற்புரையினை நூலாசிரியரும் ஓய்வு பெற்ற உதவித்தூதுவருமான ஏ. நடராஜன் அவர்களும் நிகழ்த்தினார்.



இந்நூல் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாட்டினை கண்டி நகரிலுள்ள பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் இணைந்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டி தமிழ் வர்த்தக சங்கம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி இந்து இளைஞர் மன்றம், கண்டி தமிழ்ச் சங்கம், கண்டி முத்தமிழ் சங்கம், மாத்தளை மகாத்மா காந்தி சபை, மத்தளை தமிழ் இலக்கிய மன்றம், மலையக கலை கலாசார (இரத்தின தீபம்) சங்கம், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் மற்றும் அசோகா குரூப் கம்பனியின் தவிசாளர் பி.டி.ஆர். ராஜன், சன்ரயிஸ் பிஸ்கட் கம்பனியின் பணிப்பாளர் தொழிலதிபர் எஸ். முத்தையா ஆகியோர் ஒருங்கிணைந்த பங்கேற்புடன் இந்த நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் கண்டி மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், முன்னாள் முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக, முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகெடுவ, தினகரன்/ தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், பேராசிரியர்களான எம். ஏ. நுஹ்மான், வ. மகேஸ்வரன், விஜயச்சந்திரன் உள்ளிட்ட இன்னும் பல முக்கியமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



சமூகப் பணியாளர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் உரையாற்றும் போது "கண்டியில் இதற்கு முன்னர் ஒரு புத்தக வெளியீட்டு விழாவை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கமும் தமிழ் வர்த்தக சங்கமும் இணைந்து நடத்தின. இரண்டாவதாக ஏ. நடராஜனின் புத்தக வெளியீட்டு விழாவை கண்டியிலுள்ள 10 சங்கங்கள் இணைந்து மிகவும் ஒரு ஒற்றுமையாக நடத்தியமை ஒரு முன்மாதியான விடயமாகும்" என்று தெரிவித்தார்.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உரையாற்றும் போது "இந்தியா நல்ல நிர்வாகத் திறமைமிக்க ராஜதந்திரிகளையும் தலைவர்களையும் உருவாக்கியுள்ளது. இராஜதந்திரியாக செயற்பட்டவர்கள் மிகுந்த நாட்டுப் பற்றுமிக்கவர்கள். இந்தியாவின் வெளிவிகார அமைச்சர் ஜெய்ங்கர் கூட இராஜதந்திரியாகக் கடமையாற்றியவர். இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாம் கூட சிறந்த தலைவர். அந்த வகையில் நடராஜன் அவர்கள் கூட நாட்டுப்பற்றுமிக்கவராகச் சிறந்த முறையில் கடமையாற்றினார். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இத்தகைய தலைமைத்துவங்கள் மிகவும் அவசியமாகும்.



ஒருவர் கடமையிலோ பதவிகளிலோ இருக்கின்ற காலத்தில் அவர்களுக்குப் பின்னால் சனக் கூட்டத்தினர் இயல்பாகவே இருப்பார்கள், ஆனால் அவர்கள் அதில் இருந்து ஓய்வு பெற்றால் சனக்கூட்டத்தைக் காண இயலாது. ஆனால் நடராஜன் அவர்கள் தன் கடமைகளில் போது மக்களுக்காக சேவை செய்துள்ளார். அவர் மக்களுடைய மனத்தை வென்றுள்ளார். அவர் ஓய்வு பெற்று இந்தியாவில் வாழ்ந்தாலும் இலங்கையிலுள்ள மக்களின் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவருடைய அந்த தனிச்சிறப்பினைத்தான் அவருடைய இந்த நூல் வெளியீட்டு விழாவிலே மண்டபம் நிறைந்த சனக் கூட்டத்தைக் காண்கின்றோம்.



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABJ-9692 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABO-7937 | பஜாஜ் | 2016 | மாதரா |
| ABB-5348 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABC-5958 | பியாஜியோ | 2015 | எம்பிலிபிட்டிய |
| AAW-8937 | பஜாஜ் | 2015 | அம்பாரா |
| AAZ-9341 | பஜாஜ் | 2015 | நுவரேலியா |
| AAM-5628 | பஜாஜ் | 2013 | பாணடுரா |
| AAG-4383 | பஜாஜ் | 2013 | பாணடுரா |
| AAD-3148 | பஜாஜ் | 2012 | ராகம |
| AAA-8390 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| AAC-9746 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| YY-5895 | பஜாஜ் | 2012 | ராகம |
| YX-8865 | பஜாஜ் | 2012 | அனுராதபுரம் |
| AAE-4786 | பஜாஜ் | 2012 | ராகம |
| YK-5923 | பஜாஜ் | 2011 | ராகம |
| YP-2737 | பஜாஜ் | 2011 | ராகம |
| YK-5959 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| YA-8112 | பஜாஜ் | 2010 | மாதரா |
| YH-3819 | பஜாஜ் | 2010 | ராகம |
| QW-1322 | பஜாஜ் | 2009 | பாணடுரா |
| QJ-8186 | பஜாஜ் | 2007 | ராகம |
| QE-6206 | பஜாஜ் | 2006 | நுவரேலியா |
| QI-3808 | பஜாஜ் | 2006 | கண்டி |
| QB-6991 | பஜாஜ் | 2005 | ரத்தினபுரி |
| JD-5086 | பஜாஜ் | 2004 | அனுராதபுரம் |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CAU-7566 | சுசுகி | 2016 | மாதரா |
| CAL-3102 | சுசுகி | 2015 | அனுராதபுரம் |
| KX-9397 | டாடா | 2014 | அம்பாரா |
| KU-1412 | மைக்ரோ | 2012 | பாணடுரா |
| KS-5225 | போர்ஷே | 2011 | ராகம |
| HO-8991 | KIA | 2003 | குருநாகல |
| SRI 1982 | மஸ்தா | 1985 | அனுராதபுரம் |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAF-8317 | டாடா | 2017 | அனுராதபுரம் |
| DAD-8565 | மஹிந்திரா | 2016 | ராகம |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| HE-3158 | மிட்சுபிஷி | 1998 | ராகம |

| டுயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PW-0849 | மஹிந்திரா | 2013 | அனுராதபுரம் |

| டுயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 57-3150 | மஸ்தா | 1992 | மாதரா |
| HJ-9450 | தைஹட்சு | 1999 | பாணடுரா |

| ஜீப்ஸ் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 325-5322 | மாருதி | 1991 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாறா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாண்டுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் கொழும்பு வடக்கு

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி கொழும்பு வடக்கு பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 30.11.2022 வரை (ஒரு வருடத்திற்கு) அடகு வைக்கப்பட்டுள்ளதும் 01.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 02.03.2024 மற்றும் 03.03.2024**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | டியூக் வீதி கிளை |
|---|---|
| கிளைகள் | டியூக் வீதி. முதலாம் நகர. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, தெமட்டகொட, கிராண்ட்பாஸ், புறக்கோட்டை, மிட் சிட்டி, முகத்துவாரம் கெஹெல்வத்த ஒல்கொட் மாவத்தை, செட்டித் தெரு. டாம் வீதி. சென்ட்ரல் வீதி, கொட்டாஞ்சேனை. மல்வத்தை வீதி. |
| சேவை மையங்கள் | கொழும்பு துறைமுகம் SC, மாளிகாவத்தை SC தெமட்டகொட SC, கிராண்ட்பாஸ் SC, புனித ஜோசப் SC, நாகலகம் வீதி SC, முத்துவெல்ல SC, மிஹிந்து மாவத்தை SC, ஜம்பெட்டா வீதி SC, புலுமெண்டல் வீதி SC. |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம் (கொழும்பு வடக்கு), இல. 11, டியூக் வீதி, கொழும்பு - 01 தொலைபேசி இல. 011-2344982 - 5

PEOPLE'S BANK
Pride of the Nation

---

SRI LANKA CONVENTION BUREAU

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)

# மனு முன்மொழிவுகளுக்கான அழைப்பு

## இலங்கை MICE Expo Southern Edition 2024 க்கான நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு நிறுவனமொன்றினை தேர்வு செய்தல்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தில் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் 2024 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ள இலங்கை MICE Expo Southern Edition நிகழ்ச்சியினை ஒருங்கிணைப்பதற்காக தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த நிகழ்வு முகாமைத்துவம் / ஒருங்கிணைப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

MICE சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதும், இலங்கையை சர்வதேச அளவில் MICE இடமாக நிலைநிறுத்துவதும் இலங்கை மாநாட்டு பணியகத்தின் முக்கிய பணியாகும்.

விலைமனுக் கோரல் தேசிய போட்டி ஏல செயல்முறையை பின்பற்றி இரண்டு உறை முறை மூலம் நடத்தப்படும். விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் www.meetinsrilanka.com பெற்றுக்கொள்ளலாம்.

மனுக்கள் 2024.02.26 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மனு ஆவணங்களை இலங்கை மாநாட்டு பணியகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். விலைமனுக்களை ஒப்படைக்கும் போது மீள்ப்பெறமுடியாத வைப்புத்தொகையாக ரூ.5,000/- கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் 2024.02.26 அம் திகதி மு.ப.10.00 மணிக்கு மனுதாரரடகளால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

உறையின் மேல் இடது மூலையில், **"Sri Lanka MICE Expo - Southern Edition 2024** ஐ ஒழுங்கமைப்பதற்கான நிகழ்வு ஒருங்கிணைப்பு நிறுவனத்தை தேர்வுசெய்தல்" எனக்குறிப்பிட்டு தலைவர், திணைக்களத்தின் கொள்முதல் குழு, இலங்கை மாநாட்டுப் பணியகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

முன்மனுக் கூட்டம் 2024.02.14 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு இலங்கை மாநாட்டு பணியகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனுமுன் கூட்டத்தில் நேரடியாக பங்கேற்கலாம்.

பின்வரும் இலக்கங்களினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 0114865050 / 51 அல்லது 0112440002

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
**இலங்கை மாநாட்டுப் பணியகம்**
இல-78, காலி வீதி, கொழும்பு 03.

SELACINE

---

## Ministry of Education

# Vocational Training Authority of Sri Lanka

## Procurement Notice

VTA

The Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka (VTA) invites sealed bids from eligible and qualified bidders for supplying of training equipment for VTA.

| No. | Bid No. | Description | No of Items | Non-Refundable Fee |
|---|---|---|---|---|
| 01 | VTA/PROC/GOODS/TF/ NCB/2024/11 | Turning, Milling, Grinding & Drilling Machine | 32Nos. | Rs. 3,500.00 |
| 02 | VTA/PROC/GOODS/TF/ NCB/2024/12 | Sewing Machine & Accessories | 13Nos. | Rs. 3,500.00 |
| 03 | VTA/PROC/GOODS/TF/ NCB/2024/13 | Computer & Accessories | 04 Nos. | Rs. 3,500.00 |

1. Bidding documents can be collected from the Procurement Unit of the VTA on submission of a written application to the Chairman, Vocational Training Authority of Sri Lanka from 06.02.2024 to 26.02.2024 between 9.00 a.m. and 3.00 p.m. on working days upon payment of a non-refundable fee as mentioned in the above table. The method of payment should be in cash.
2. Contract reference "file name" should be written on the top left hand corner of the envelope. Sealed Bids shall be delivered by registered post to the Chairman, Procurement Committee Vocational Training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05 to reach at or before 10.30 a.m. on 27.02.2024, or can be deposited in the Tender box kept at the Procurement Unit of the VTA before 10.30 a.m. on 27.02.2024. Bids will be opened immediately after closing of the Bids and late bids will be rejected.
3. Bidders or their authorized representatives can be presented at the bid opening.
4. Any further clarification with regard to the Procurement can be obtained from Assistant Director (Procurement) prior to the closing of bids.
5. All the information requested in the bid document should be forwarded when submitting the bid document.
6. Pre-Bid meeting will be held on 19.02.2024 at 10.30 a.m. at the Conference Hall of the 05th Floor "Nipunatha Piyasa" building premises. All Bidders are expected to attend for pre bid meeting.

Chairman
Department Procurement Committee
**Vocational Training Authority of Sri Lanka,**
"Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha,
Narahenpita,Colombo 05.

Tel :071-9476753, 011-2596516, 011-2352150

---



# பெறுகை அறிவித்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல் - (NCB)
## இறக்குமதிகள்

கீழேயுள்ள பொருட்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/001/2024/01 | 450(±5%) | Procurement of imported White Printing Paper in reels 750mm/70(±2.5%) gsm | 1,800,000.00 |
| SPC/SUP/F1/001/2024/03 | 200(±5%) | Procurement of imported White Printing Paper in reels /774mm/70(±2.5%) gsm | 800,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.

   அ. முகவராண்மையின் நிலபரத்தை உறுதிசெய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/

   அற்றோணித்தத்துவம்

   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2024.02.16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2024.02.06 ஆம் திகதியிலிருந்து 2024.02.26 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2024.02.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியிலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பாணலுவ, பாதுக்க.**
**05.02.2024.**

SPC

---

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

## உடவளவை யானைகள் இடைக்கால இல்லம் மற்றும் கிரிதலே விலங்குகள் வைத்தியசாலையிலுள்ள யானைக் குட்டிகளுக்காக பால்மாவைக் கொள்வனவு செய்தல்

## WL/02/17/05/MILK/2024

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் உடவளவை யானைகள் இடைக்கால இல்லம் மற்றும் கிரிதலே விலங்குகள் வைத்தியசாலையிலுள்ள யானைக் குட்டிகளுக்காக 2024ஆம் வருடத்தில் பின்வரும் வகையில் பால்மாவைக் கொள்வனவு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இதில் ஆர்வம் காட்டும் உற்பத்தியாளர்கள் மற்றும் உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | உருப்படிகள் | இடம் | ஒரு மாதத்திற்கு வழங்க வேண்டிய அளவு Kg | 2024-03-01ஆம் திகதி முதல் 2025-02-28ஆம் திகதி வரை வழங்க வேண்டிய மொத்த அளவு Kg |
|---|---|---|---|---|
| A | குழந்தைகள் பால்மா சூத்திரம் II (Infant formula Stage II) | உடவளவை | 2464 | 29,565 |
| | | கிரிதலே | தேவைக்கேற்ப | 3,024 |
| B | குழந்தைகள் பால்மா சூத்திரம் I (Infant formula Stage 1) | உடவளவை | தேவைக்கேற்ப | 120 |

01. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
02. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2024-02-26ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்ல, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 2024-02-26ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்து மூலமான கோரிக்கை சகிதம் 34,000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்பை ரொக்கப் பணமாக திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்வி ஆவணங்களுடன் 1,962,540.00 ரூபாவுக்கான கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் அல்லது வனசீவராசிகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கொடுப்பனவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் பிணை முறிகள் சமர்ப்பிக்கப்படாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப் பிணை முறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உடவளவை யானைகள் இடைக்கால இல்லம் மற்றும் கிரிதலே விலங்குகள் வைத்தியசாலையிலுள்ள யானைக் குட்டிகளுக்காக பால்மாவைக் கொள்வனவு செய்தல் WL/02/17/05/MILK/2024" எனக் குறிப்பிட்டு 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
08. கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
09. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**IPW / மாதம்பை மற்றும் IPW முந்தல் பிரிவுக்காக SUIT EN 45 E1 புகையிரதம் தண்டவாளங்களுக்கு பொருத்தமான LESS HIGH CONCRETE SLEEPERS 4,000 னை வழங்களுவதற்கான கொள்முதல்**

**இலங்கை புகையிரத சேவைகள் - SRS F.7896**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தலைவரினால் (மேஜர்) **IPW / மாதம்பை மற்றும் IPW முந்தல் பிரிவுக்காக SUIT EN 45 E1** புகையிரதம் தண்டவாளங்களுக்கு பொருத்தமான **LESS HIGH CONCRETE SLEEPERS 4,000** னை வழங்களுவதற்கான கொள்முதல் வழங்குவதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை 2024.02.06 ஆம் திகதி 2024.02.28 ஆம் திகதி வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

| | |
|---|---|
| தொலைபேசி இல | : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818 |
| தொலைநகல் இல | : +94 (11) 2432044 |
| மின்னஞ்சல் | : srs.slr@gmail.com |
| இணையத்தளம் | : www.railway.gov.lk |

4. மனுதாரர், இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 இற்கும் அதிகமான உயரம் குறைந்த **LESS HIGH CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கொன்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Poles) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு குறையாத கொன்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கையின் ரயில்வே கொள்முதல் புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத ரூ.28,250/- கொள்முதல் கட்டணத்தை செலுத்தி 2024.02.06 ஆம் திகதி முதல் 2024.02.28 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக ரூ.1,550,000.00 இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் 2024.02.29 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

தலைவர்,
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
கொள்முதல் இல.: **SRS/F.7896**

SELACINE

# வரையறுக்கப்பட்ட அகில இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு பராமரிப்பு கூட்டுறவுச் சங்கம்

## 115/B, மினுவாங்கொட வீதி, கட்டுவன, ஜா-எல.

## பண்ணை விலங்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024/2025

வரையறுக்கப்பட்ட அகில இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு பராமரிப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு பண்ணை விலங்குகளை வழங்கக்கூடிய பண்ணை விலங்குகளை பின்வரும் வகைப்படுத்தலின் பிரகாரம் 2024/2025 வருடங்களில் தொடர்ச்சியாக வழங்குவதற்கு தகைமை வாய்ந்த வழங்குநர்கள் பதிவு செய்துகொள்ளப்படுவர்.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் மற்றும் மாகாண கால்நடை மருத்துவ அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பண்ணைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| விலங்கு வகைகள் | | காலம் | ஒரு குஞ்சின் விலை |
|---|---|---|---|
| கோழிக் குஞ்சு | நாட்டுக் கோழிக் குஞ்சுகள் | 2 வாரங்கள் | |
| | | 3 வாரங்கள் | |
| | | 4 வாரங்கள் | |
| | பண்ணை கோழிக் குஞ்சுகள் (முட்டைக்காக) | 1 நாள் வயதுடையவை | |
| ஆட்டுக் குட்டி வகைகள் | மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க கலப்பினம் | 24 வாரங்கள் | |
| | ஜமுனா பாரி | 24 வாரங்கள் | |
| | சனஹன் | 24 வாரங்கள் | |
| பன்றிக் குட்டி வகைகள் | மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க கலப்பினம் | 08 வாரங்கள் | |
| | லேன்ட் ரேஸ் | 08 வாரங்கள் | |
| | லார்ஜ் வைட் | 08 வாரங்கள் | |
| | டியுரோ | 08 வாரங்கள் | |

விலைமனுக்களுடன் பின்வரும் தகவல்களை இணைத்தல் வேண்டும்.

- கால்நடை மருத்துவ அலுவலகத்தின் பதிவுச் சான்றிதழ்
- வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ்
- இனப்பெருக்க நிலைய பதிவுச் சான்றிதழ்
- குஞ்சுகளுக்கான உத்தரவாத சான்றிதழ் / உத்தரவாதக் காலம்
- தடுப்பூசி தொடர்பான விபரங்கள்
- பெட்டை விலங்குகளின் சதவிகிதம்
- இனப்பெருக்க நிலையத்தின் கொள்ளளவு

077-0757848 இலக்க WhatsApp மூலம் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப் படிவத்துடன் ஜா-எல இலங்கை வங்கிக் கிளையில் பேணப்படும் 0091130026 எனும் கணக்கிலத்திற்கு (மீளளிக்கப்படாத) 2000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் விண்ணப்பப் படிவத்தை மேற்கூறப்பட்ட முகவரிக்கு குறித்த சங்கத்தின் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். இதன் பிரகாரம் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் விண்ணப்பங்களை ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘பண்ணை விலங்கு வழங்குநர்களைப் பதிவுசெய்தல்’’ எனக் குறிப்பிட்டு ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**வரையறுக்கப்பட்ட அகில இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு பராமரிப்பு கூட்டுறவுச் சங்கம்**
**தொலைபேசி இல. 077-0884640/ 0770757848**
**2024-02-06ஆம் திகதி.**

# இலங்கை வங்கி

## எலவிற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**1. கடன் தொடர்பு இல.76626337,76626418,76626430,76637196,76637413,79144807.**

**நிரந்தர மேலதிகப்பற்று நடைமுறைக்கணக்கு தொடர்பு இல. 9695750.**

இரத்தினபுரி,தெல்வல, பண்டாரஹேன எஸ்டேற் எனும் முகவரியைச் சேர்ந்த M/s பண்டாரஹேன பிளான்டேஷன் (பிரைவேற்) லிமிடெற் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022 நவம்பர் 11ஆம் திகதி 2306 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2022 நவம்பர் 02 ஆம் திகதி புதன்கிழமை தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு காணி அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேலே ஈட்டு முறி இல.1556 இல் குறிப்பிட்ட அட்டவணை.**

1. சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வலயில் அமைந்த விதானகந்த பங்குவ அல்லது விதானகந்த எஸ்டேற் என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2010 ஜூலை 12 திகதியிட்ட வரைபடம் இல.2010/ 587 இல் காணித்துண்டு 1 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு மேறிகுறிப்பிட்ட வரைபடம் இல.2010/ 587இன் பிரகாரம் பத்து ஏக்கர்கள் மூன்று றூட்கள் நான்கு பேர்ச்சுகள் (ஏ.10,றூ.03,பே.04) விஸ்தீரணமுடையது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L08/102 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. மேற்கூறிய டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பாகம்” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2013 ஜனவரி 14 திகதியிட்ட வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 1A என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2013/1263 இன் பிரகாரம் முப்பத்தைந்து ஏக்கர்கள் ஒரு றூட முப்பது பேர்ச்சுகள் (ஏ.35,றூ.01,பே.30) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் L24/34இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. மேற்கூறிய டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பாகம்” என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 2 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2013/1263 இன் பிரகாரம் இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.00,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் L24/35இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4. மேற்கூறிய டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி” என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 3 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2013/1263 இன் பிரகாரம் இரண்டு றூட்கள் பதினான்கு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.02,பே.14) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் L24/36இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
5. சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த மொரவாக்கெல்ல எஸ்டேற் அல்லது மஹமொரவாக்கெல்ல எஸ்டேற் என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2012.06.26 திகதியிட்ட வரைபடம் இல. 2012/477 இல் காணித்துண்டு 1 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு இருபது ஏக்கர்கள் இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.00,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/37இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2013/1263 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01B, உத்தரவுபெற்ற நில அளவையாளர் சிறிநந்தன பஸ்குவெல் தயாரித்த 1993 மார்ச் 22 ஆம் திகதிய 1234 ஆம் இலக்க வரைபடத்தில் காணப்படும் காணித்துண்டு (பாதை ஒதுக்கம்) மீதான வழி உரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

| NO | NAME | QTY. | MADE | AGE |
|---|---|---|---|---|
| 1 | TroughNo.01/96feet/10hp Motor | 1 | - | 25 |
| 2 | TroughNo.02/96feet/10hp Motor | 1 | - | 25 |
| 3 | TroughNo.03/100feet/10hp Motor | 1 | - | 25 |
| 4 | TroughNo.04/100feet/10hp Motor | 1 | - | 25 |
| 5 | TroughNo.05/100feet/7.5hp Motor | 1 | - | 25 |
| 6 | TroughNo.06/96feet/10hp Motor | 1 | - | 17 |
| 7 | TroughNo.07/96feet/10hp Motor | 1 | - | 17 |
| 8 | TroughNo.08/96feet/10hp Motor | 1 | - | 17 |
| 9 | TroughNo.09/96feet/10hp Motor | 1 | - | 16 |
| 10 | TroughNo.10/80x14feet/5.5hp-02Motor | 1 | - | 1 |
| 11 | RollNo.1 /HiJaket/ 47"/20hp Motor | 1 | Colombo Commercial Co. | 17 |
| 12 | RollNo.2 /HiJaket/ 47"/20hp Motor | 1 | Colombo Commercial Co. | 17 |
| 13 | RollNo.3/ 47"/20hp Motor | 1 | Colombo Commercial Co. | 16 |
| 14 | RollNo.4/ 45"/20hp Motor | 1 | Walkers&Sons | 22 |
| 15 | RollNo.5/ 47"/20hp Motor | 1 | S.P.L.Engineers | 2 |
| 16 | RollNo.6/47"/20hp Motor | 1 | S.P.L.Engineers | 2 |
| 17 | RollBrekerNo.1/3.0hp/12' | 1 | Colombo Commercial Co. | 5 |
| 18 | RollBrekerNo.2/2.0hp/12' | 1 | Colombo Commercial Co. | 4 |
| 19 | RollBrekerNo.3/2.0hp/12' | 1 | Local | 5 |
| 20 | RollBreker No.4/3.0hp/4'x12' | 1 | Isuru Engineers | 2 |
| 21 | Drier No.01 /Conquest/6'/ S. No.1109037 | 1 | India | 8 |
| 22 | Drier No. 02/ 6' /S. No.0452 | 1 | Colombo Commercial Co. | 15 |
| 23 | Fiber Extractor/5.5hp Motor | 2 | P.P.P.Jinadasa | 9 |
| 24 | Stalk Extractor /0.5hp Motor | 1 | P.P.P.Jinadasa | 15 |
| 25 | Middilton No.1/2hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 26 | Middilton No.2/2hp | 1 | Colombo Commercial Co. | 15 |

| NO | NAME | QTY. | MADE | AGE |
|---|---|---|---|---|
| 27 | Middilton No.3/5hp | 1 | Local | 15 |
| 28 | Chota/3 hp,1hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 29 | Michi Sifter No.01/03hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 30 | Michi Sifter No.02/02hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 31 | Michi Sifter No.03/02hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 32 | Michi Sifter No.04/02hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 33 | Michi Sifter No.05/02hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 34 | Michi Sifter No.06/02hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 35 | MichiSifterNo.07/02hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 36 | MichiSifter No.08/02hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 37 | Winnower No.01 /5.5 hp,1 hp | 1 | Colombo Commercial Co. | 15 |
| 38 | Winnower No.02 /5.5 hp,1 hp | 1 | Colombo Commercial Co.. | 15 |
| 39 | Winnower No.01 /5.5 hp,1 hp | 1 | China | 15 |
| 40 | Colour Shorter No.01/Nanta9000 | 1 | SouthKorea | 3 |
| 41 | Colour Shorter No.02/Jiexun, DCS5000 | 1 | China | 1 |
| 42 | Colour Shorter No.03/Sen-vec8300R | 1 | Japan | 17 |
| 43 | Colour Shorter No.04/Super Shizuoka | 1 | Japan | 13 |
| 44 | Genarator/ Caterpillar/ 250kva/ 9x9720 | 1 | - | 15 |
| 45 | Shola Firewood Heater | 1 | - | 8 |
| 46 | Avery Weighing Scale | 4 | - | 4 |
| 47 | Firewood Spliter | 2 | - | 4 |
| 48 | DustFan/S.No.1633/BG0186 | 1 | - | 8 |
| 49 | Humidi Fire | 4 | - | 5 |
| 50 | CapacitorBank | 1 | ClarionInternational | 5 |

**மேற்குறிப்பிட்ட 1557 ஆம் இலக்க ஈட்டுமுறியில் குறிப்பிட்டுள்ள அட்டவணை.**

சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2013.01.14 திகதியிட்ட வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 1A என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு முப்பத்தைந்து ஏக்கர்கள் ஒரு றூட் முப்பது பேர்ச்சுகள் (ஏ.35,றூ.01,பே.39) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/34இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2013.01.14 திகதியிட்ட வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 2 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/35இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2013.01.14 திகதியிட்ட வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 3 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு இரண்டு றூட்கள் பதினான்கு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.02,பே.14) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் 2013/1263 இலக்க வரைபடத்தில் விபரித்த காணித்துண்டு 01B வழி உரிமையையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் L24/36இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வரைபடம் இல. 2013/1263 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01B மீதான வழி உரிமையும் ஆகும்.

**1558ஆம் இலக்க ஈட்டு முறியில் குறிப்பிட்டுள்ள அட்டவணை.**

சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த “மொரவாக்கெல்ல எஸ்டேற் அல்லது மஹமொரவாக்கெல்ல எஸ்டேற்” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2012.06.26 திகதியிட்ட வரைபடம் இல.2012/477 இல் காணித்துண்டு 1 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு இருபது ஏக்கர்கள் இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.20,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/37இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிறிநந்தா பஸ்குவல் தயாரித்த 1993 மார்ச் 22 திகதியிட்ட 1234 ஆம் இலக்க வரைபடத்தில் காணப்படும் காணித்துண்டு 24 மீதான வழி உரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

**1293ஆம் இலக்க ஈட்டு முறியில் குறிப்பிட்டுள்ள அட்டவணை.**

1. சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த விதானகந்த எஸ்டேற் அல்லது விதானகந்த பங்குவ என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2000.07.12 திகதியிட்ட வரைபடம் இல.2010/587 இல் காணித்துண்டு 1 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு பத்து ஏக்கர்கள் மூன்று றூட்கள் நான்கு பேர்ச்சுகள் (ஏ.10,றூ.03,பே.04) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L08/102 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2013.01.14 திகதியிட்ட வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 1A என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு முப்பத்தைந்து ஏக்கர்கள் ஒரு றூட் முப்பது பேர்ச்சுகள் (ஏ.35,றூ.01,பே.30) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/34 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. மேற்குறித்த டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி” என அழைக்கும் காணி மேற்குறித்த வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 2 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு 2013/1263ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/35 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4. மேற்குறித்த டெல்வல கிராமத்தில் அமைந்த “பண்டாரஹேன எஸ்டேற்றின் பகுதி” என அழைக்கும் காணி மேற்குறித்த வரைபடம் இல.2013/1263 இல் காணித்துண்டு 3 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு 2013/1263ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இரண்டு றூட்கள் பதினான்கு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.02,பே.14) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/36 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
5. சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் நவதுன் கோரளை மெத பற்றுவவில் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேசச் செயலகப் பிரிவில் டெல்வல கிராம சேவகர் பிரிவில் டெல்வல கிராமத்தில் அமைந்த “மொரவாக்கெல்ல எஸ்டேற் அல்லது மஹமொரவாக்கெல்ல எஸ்டேற்” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.W.S.K.விக்னராஜா தயாரித்த 2012.06.26 திகதியிட்ட வரைபடம் இல.2012/477 இல் காணித்துண்டு 1 என குறிப்பிட்டு அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயிக்கப்பட்ட விபரித்த காணித்துண்டு இருபது ஏக்கர்கள் இரண்டு றூட்கள் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.20,றூ.02,பே.35) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் L24/37இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வரைபடம் இல. 2013/1263 இல் விபரித்த காணித்துண்டு 01B, உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிறிநந்தா பஸ்குவல் தயாரித்த 1993 மார்ச் 22 திகதியிட்ட 1234 ஆம் இலக்க வரைபடத்தில் காணப்படும் காணித்துண்டு 24 மீதான வழி உரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

“மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே. இல. 045-2255494, 045-2255280 ஊடாக கலவானைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்.”

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

**பணம் செலுத்தும் முறை.**

**ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் விலைக்கு வாங்குபவர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.**

1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.
1.2 வற் (VAT) கட்டணம்.(ஏற்புடையதாயின்)
1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகாரசபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.5 ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.
1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏலவிற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம்,விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி.**

இரத்தினபுரி நகர மத்தியிலிருந்து பெல்மடுல்ல பாதையில் திரிவானகெட்டிய சந்தி வரை சுமார் 4 கி.மீ. சென்று கலவான பாதைக்கு வலதுக்கு திரும்பி பேபொடுவ சந்தி வரை சுமார் 23 கி. மீ. தூரம் சென்று தெல்வல பாதைக்கு இடதுக்கு திரும்பி சுமார் 3.0 கி.மீ. சென்று பண்டாரஹேன பாதைக்கு வலதுக்கு திரும்பி சம்பந்தப்பட்ட ஆதனத்துக்கு சுமார் 600 மீற்றர் வரை செல்லவும்.(பண்டாரஹேன தேயிலைத் தொழிற்சாலை எனும் பெயரில் ஆதனம் அமைந்துள்ளது)

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி டபிள்யு.எஸ். இந்திராணி**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**கலவானைக் கிளை.**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 பெப்ரவரி 6 செவ்வாய்க்கிழமை

# ஆப்கானுடனான ஒரே டெஸ்டில் இலங்கை அணி இலகு வெற்றி




ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒரு நாளை மிச்சம் வைத்து பத்து விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று இலங்கை அணிக்கு 56 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் விக்கெட் இழப்பின் 7.2 ஓவர்களில் அந்த இலக்கை எட்ட இலங்கை அணியால் முடிந்தது.

இதன்போது திமுத் கருணாரத்ன ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் நிஷான் மதுஷ்க ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு 241 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஆப்கானிஸ்தான் அணி 296 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்ததை அடுத்தே இலங்கை அணிக்கு இலகுவான வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது ஆப்கானிஸ்தான் அணி 199 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையிலேயே நேற்று இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் 54 ஓட்டங்களை பெற்ற ரஹமத் ஷா கசுன் ராஜித்தவின் பந்துக்கு ஆட்டமிழந்ததோடு சதம் பெற்ற இப்ராஹிம் சத்ரான் 114 ஓட்டங்களுடன் விக்கெட்டை தாரை வார்த்தை அடுத்து ஆப்கான் அணி தடுமாற்றம் கண்டது.

இதனை அடுத்து அந்த அணி மேலும் 59 ஓட்டங்களை பெறுவதற்குள் எஞ்சிய ஏழு விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. குறிப்பாக சிறப்பாக பந்து வீசிய பிரபாத் ஜயசூரிய 47 ஓவர்களில் 107 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இந்த டெஸ்டில் அவர் மொத்தம் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்றார். அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளையும் உபாதைக்கு உள்ளான சாமிக்க குணசேகரவுக்கு பதில் இரண்டாவது இன்னிங்ஸில் மாற்று வீரராக களமிறங்கிய வேகப் பந்து வீச்சாளர் கசுன் ராஜித்த 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னதாக ஆப்கானிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களையே பெற்றதோடு அனுபவ வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் (141) மற்றும் தினேஷ் சந்திமால் (107) ஆகியோர் சதத்தின் உதவியோடு இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 439 ஓட்டங்களை பெற்றது. இந்த டெஸ்ட் போட்டி உலக டெஸ்ட் சம்பியன்சிப் தொடருக்கு உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வந்திருக்கும் ஆப்கானிஸ்தான் அணி அடுத்து இலங்கைக்கு எதிரான மூன்று ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் பெப்ரவரி 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.




# மெர்கன்டைல் நொக் அவுட் இறுதிப் போட்டிகள் இன்று

மெர்கன்டைல் கால்பந்து சங்கத்தினால் நடத்தப்படும் நொக் அவுட் கால்பந்து தொடரின் முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுகளுக்கான இறுதிப் போட்டிகள் கொழும்பு, சிட்டி லீக் கால்பந்து மைதானத்தில் இன்று (06) நடைபெறவுள்ளன.

இதில் இன்று பி.ப. 1.30க்கு ஆரம்பமாகும் இரண்டாம் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் மற்றும் ஸ்ரீ லங்கா ஏர்லைன்ஸ் அணிகள் மோதவுள்ளன. செலிங்கோ அணி அரையிறுதிப் போட்டியில் எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் அணியை பெனால்டி சூட் அவுட் முறையில் 5–4 என்ற கோல்களால் வீழ்த்தியதோடு ஸ்ரீ லாங்க ஏர்லைன்ஸ் அரையிறுதியில் சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பீஎல்சி அணியை 6–5 என்ற கோல்களால் பெனால்டி ஷூட் அவுட் முறையில் தோற்கடித்தது.

இதனைத் தொடர்ந்து பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பீஎல்சி அணியும் எச்.என்.பி. அசூரன்ஸ் பீஎல்சி அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

அரையிறுதிப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய எக்ஸ்போலங்கா 3–0 என்ற கோல்களால் அமானா வங்கியை தோற்கடித்ததோடு எச்.என்.பி. அசூரன்ஸ் பரபரப்பான அரையிறுதிப் போட்டியில் தி ட்ரவலர்ஸ் கிளோபல் அணியை வென்றது.





# ஹூத்திக்கள் மீது மீண்டும் தாக்குதல்

யெமனில் உள்ள ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா நேற்று முன்தினம் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாகவும் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் தெரிவித்துள்ளது.

செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது எறிவதற்கு தயாராக வைத்திருந்த நான்கு கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் நிலத்தைத் தாக்கும் குரூஸ் ஏவுகணை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதாக அந்தக் கட்டளையகம் குறிப்பிட்டது.

முன்னதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இணைந்து ஹூத்தி இலக்குகள் மீது கடந்த சனிக்கிழமை கடும் தாக்குதல்களை நடத்தி இருந்தன.

இதில் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி ஜோர்தானில் ஆளில்லா விமானத் தாக்குதலில் மூன்று அமெரிக்க துருப்புகள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரானிய புட்சிக் காவல் படை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட போராட்டக் குழுக்களை இலக்கு வைத்து அமெரிக்கா கடந்த வெள்ளியன்று தாக்குதல்களை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த குழுக்களை கட்டுப்படுத்த மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் அந்நாட்டு ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக ஹூத்திக்கள் சூளுரைத்துள்ளனர். இந்தத் தாக்குதல்கள் சர்வதேச வர்த்தகத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜனவரியில் சுயேஸ் கால்வாய் வருவாய் கிட்டத்தட்ட பாதியாக வீழ்ச்சி கண்டிருப்பதாக எகிப்து குறிப்பிட்டுள்ளது. ஹூத்திக்களின் தாக்குதல்கள் காரணமாக பல கப்பல் நிறுவனங்கள் செங்கடல் வழியான பயணப்பாதையை தவிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மனித உரிமைகள் குறித்து அவதானம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நான்காவது உலகளாவிய கால மீளாய்வில் உலகின் ஒவ்வொரு நாட்டினதும் மனித உரிமை நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் இம் மீளாய்வு அமர்வின் போது ஐ.நாவில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டினதும் மனித உரிமைகள் குறித்த பதிவுகள் மீளாய்வு செய்யப்படுவதோடு குறிப்பிடத்தக்க சிபாரிசுகள் வழங்கப்படும். இந்த உலகளாவிய கால மீளாய்வு அமர்வு இடம்பெற்ற சமயம் ஐ.நா. தலைமையகத்திற்கு முன்பாக உய்குர் மற்றும் திபெத் செயற்பாட்டாளர்கள் தங்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு கோரி பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கருத்து தெரிவித்த சுவிட்சர்லாந்தின் உலக உய்குர் காங்கிரஸ் தலைவர் குறிப்பிடுகையில், "மனித உரிமைகள் கோட்பாட்டை நிலைநிறுத்துவதற்கும், அமைதியாக வாதிடுவதற்கும், எந்தவொரு தனிநபரும் அல்லது சமூகமும் பின்தங்கியிருக்கக் கூடாது" என்றுள்ளார்.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் போர் நிறுத்த முயற்சியாக பிளிங்கன் மீண்டும் பிராந்தியம் விரைவு

### உடன்பாடு எட்டுவதில் தொடர்ந்தும் இழுபறி



காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இந்தப் போர் வெடித்ததில் இருந்து ஐந்தாவது முறையாகவும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மத்திய கிழக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது அவர் சவூதி அரேபியா, இஸ்ரேல், எகிப்து மற்றும் கட்டார் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

காசா போர் நான்காவது மாதத்தை எட்டும் நிலையில் அந்த முற்றுகை பகுதியில் ஏற்பட்டிருக்கும் பாரிய மனிதாபிமான நெருக்கடி குறித்து உதவிக் குழுக்கள் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வரும் நிலையிலேயே இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

"தற்போதைய நிலைமையை விபரிக்க முடியாதுள்ளது" என்று எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு காசாவின் ரபாவுக்கு தப்பி வந்த பலஸ்தீனர் ஒருவரான ஹமூதா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய தாக்குதல்களால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் ரபாவில் தற்போது காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். அந்தப் பகுதியை 'பிரஷர் குக்கர்' அடுப்பாக ஐ.நா விபரித்துள்ளது.

"உங்களிடம் மில்லியன் டெலர்கள் இருந்தாலும் சரி நூறு டொலர்கள் இருந்தாலும் சரி அனைவரும் ஒரே நிலைமையையே எதிர்கொள்கிறார்கள்" என்று ஹமூதா குறிப்பிட்டார்.

கடந்த வார இறுதியில் இஸ்ரேலியப் படை மேலும் தெற்காக எல்லை நகரை நோக்கி முன்னேற ஆரம்பித்துள்ளது. இது அந்தத் தரைப்படை ரபா நகரை நோக்கி வரும் அச்சத்தை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கிழக்கு ரபா மற்றும் தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் நேற்று (05) பீரங்கி தாக்குதல்கள் இடம்பெறும் சத்தம் கேட்பதாக அங்கிருப்பவர்களை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போரைத் தூண்டிய கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிய இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கான திட்டம் கான் யூனிஸ் நகரில் இருந்து வகுக்கப்பட்டதாகவும் இந்த நகரிலேயே ஹமாஸ் உயர் அதிகாரிகள் ஒளிந்திருப்பதாகவும் இஸ்ரேல் கூறுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் திங்கட்கிழமை வரை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட குறைந்தது 128 பேர் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குறிப்பாக மத்திய காசாவில் டெயிர் அல் பலாஹ் நகரின் குடியிருப்புகள் மீது நடத்திய தாக்குதல்களில் 30க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனைகளுக்கு அருகாமை பகுதிகள் உட்பட காசாவின் மத்திய மற்றும் தெற்கு முனைகளில் இஸ்ரேல் தொடர்ந்து குண்டுகளை வீசி வருவதாக ஹமாஸ் அரச ஊடக அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

**உடன்பாடு இல்லை**

கடந்த ஜனவரியில் பாரிஸில் இடம்பெற்ற அமெரிக்கா, இஸ்ரேல், எகிப்து மற்றும் கட்டார் அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் வரையப்பட்ட போர் நிறுத்த முன்மொழிவு குறித்து, தற்போது பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும்பிளிங்கன்பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்தியம் எங்கும் ஈராக் ஆதரவு போராட்டக் குழுக்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாக்குதல்களை நடத்துவதோடு. அமெரிக்காவின் பதில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்து பிராந்தியம் எங்கும் போர் சூழல் உச்சம் பெற்றிருக்கும் நிலையில் இராஜதந்திர முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டிருக்கும் இந்தப் போர் நிறுத்தத்தின்படி ஆரம்பத்தில் ஆறு வாரங்கள் சண்டை நிறுத்தப்பட்டு ஹமாஸின் பிடியில் இருக்கும் பணயக் கைதிகள் மற்றும் இஸ்ரேலிய சிறையில் உள்ள பலஸ்தீனர்களுக்கு இடையிலான கைதிகள் பரிமாற்றம் ஒன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும் உடன்பாடு ஒன்று இன்னும் எட்டப்படவில்லை என்று ஹமாஸ் தெரிவித்திருக்கும் அதே நேரம், இஸ்ரேலிய அதிகாரிகள் சிலர் உடன்படிக்கைக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். பலஸ்தீன போராளிகளால் பிடிக்கப்பட்ட சுமார் 250 இஸ்ரேலிய பணயக்கைதிகளில் தொடர்ந்தும் 132 பேர் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதில் கொல்லப்பட்டதாக நம்பப்படும் 27 பேரும் அடங்குவர்.

இஸ்ரேல் கிட்டத்தட்ட நான்கு மாதங்களாக காசா மீது நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 27 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இதில் சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகமாக உள்ளனர்.



காசா மோசமான மனிதாபிமான நிலையை எதிர்கொண்டிருப்பதாக எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டிருக்கும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம், "இடைவிடாத குண்டு தாக்குதலுக்கு மத்தியில் சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாடுகளை பெறுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது" என்றது.

பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் 12 ஊழியர்கள் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் அமெரிக்கா தலைமையிலான ஒரு டஜனுக்கு மேற்பட்ட நாடுகள் இந்த ஐ.நா நிறுவனத்திற்கான நிதியை இடைநிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிதி இடைநிறுத்தப்பட்டிருப்பது காசாவில் பெரும் பட்டினி மற்றும் நோய் பரவலை எதிர்கொண்டிருக்கும் 1.1 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கான முக்கிய உதவிகளை வழங்கும் ஐ.நா நிறுவனத்தின் இருப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி உள்ளது என்று ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு கொள்கை தலைவர் ஜோசப் பெரல் எச்சரித்துள்ளார்.

இந்த நிறுவத்தின் செயற்பாடுகளில் தனிக்கை செய்யவிருப்பதாக ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

**மனிதாபிமான நெருக்கடி**

பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் முன்னர் கருத்து வெளியிட்ட பிளிங்கன், மனிதாபிமான நெருக்கடி தமது கவனத்தில் இருக்கும் ஒன்றாக அமையும் என்றார்.

"காசாவில் மனிதாபிமான தேவைகளை அவசரமாக நிவர்த்தி செய்ய வேண்டி உள்ளது என்பதோடு மத்திய கிழக்கின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவது தொடர்பிலும் சவூதியுடனான பேச்சுவார்த்தையில் நாம் முன்னுரிமை அளிக்கவுள்ளோம்" என்று பிளிங்கன் குறிப்பிட்டார்.

இந்தப் போருக்கு முன்னர் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்துவதில் சவூதி அவதானம் செலுத்தி வந்தது. கடந்த ஜனவரியில் சவூதி முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானுடன் பேசிய பிளிங்கன், இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்துவதில் அவர் தொடர்ந்தும் ஆர்வத்தை வெளிப்படுத்தியதாக குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவிர், வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், இஸ்ரேலிய நெருங்கிய நட்பு நாடு போதுமான ஆதரவை தருவதில்லை என்று குறை கூறிய நிலையிலேயே பிளிங்கனின் பிராந்திய விஜயம் இடம்பெற்றுள்ளது.

"எங்களுக்கு முழு ஆதரவை வழங்குவதற்கு பதிலாக, (அமெரிக்க ஜனாதிபதி ஜோ) பைடன் மனிதாபிமான உதவி மற்றும் எரிபொருளை (காசாவிற்கு) வழங்குவதில் மும்முரமாக இருக்கிறார், அது ஹமாஸுக்கு செல்கிறது" என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான கட்டுரையில் கிவிர் குறிப்பிட்டிருந்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீனர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட நான்கு இஸ்ரேலிய குடியேறிகள் மீது அமெரிக்கா தடை விதித்ததை அடுத்து கிவிர் தனது கோபத்தை வெளியிட்டுள்ளார். "எங்கள் தேசிய நலன்களில் உறுதியாக நிற்கும் அதே வேளையில், அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகத்துடனான நமது உறவுகளை எவ்வாறு வழிநடத்துவது என்பதை அறிய எனக்கு உதவி தேவையில்லை" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது சொந்த அமைச்சருக்கு பதிலளித்துள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சரவைக்குள் பிளவுகள் ஏற்பட்டிருக்கும் அதேநேரம் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேலுக்குள் நெதன்யாகு அரசுக்கு கடும் அழுத்தம் நிலவி வருகிறது. முன்கூட்டி தேர்தலை நடத்தக் கோரி டெல் அவிவில் நூற்றுக்கணக்கானோர் கடந்த சனிக்கிழமை பேரணி நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.